
www.tamilarangam.net

# வெகுஜனம்

## இன்றைய இலங்கை



குரல்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# குறிஞ்சிக் குறைகள்

பழ - கருப்பையா

மலையகத்தை சுரண்டி ஏப்பம் விட்டுக் கொண்டு மலையகம் வாழ் மக்களை ஒடுக்கு முறைகளுக்குள்ளாக்கிவரும் முதலாளித்துவக் கும்பல்கள் காலத்துக்குக்காலம் மலையக மக்களின் எழுச்சிகளை, விடுதலை உணர்வுகளை அடக்கியும், ஏமாற்று வழிகளால் திசைதிருப்பியும் வந்துள்ளனர்.

அண்மைக்காலங்களில் வடக்குகிழக்கு விடுதலை இயக்கங்களுடன் மலையக இளைஞர்கள் தம்மை இணைத்துக் கொண்டமை தமக்கு பேராபத்து என்றும் விரைவில் மலையகத்தைதாம் இழந்து விடுவோம் என்ற அச்சமும் கொண்ட இக்கும்பலும் அரசும் அண்மைக்காலங்களில் விடுதலை வேட்கை கொண்ட இளைஞர்களை கொள்ளைக்காரர்கள் எனப்பட்டம் சூட்டி கைது செய்து சிறைகளில் அடைத்து வருகின்றனர். மலையக இளைஞர்களை சிறையிலடைப்பதன் மூலம் அவர்களின் உணர்வுகளை, விடுதலை வேட்கையினை அழித்து விடமுடியுமென பகற்கனவு கண்டு கொண்டிருக்கிறார்கள் மலையக மந்திரிகள். மலையகத்தின் விடுதலையின்பால் அக்கறை கொண்ட முற்போக்குசக்திகள் இந்நடவடிக்கைகளுக்கெதிராக குரல் கொடுத்து இவற்றை அம்பலப்படுத்துவதோடு மலையக இளைஞர்களை அரசியல் மயப்படுத்தி ஸ்தாபனமயப்படுத்த முன்வரவேண்டும்.

---

ஜேர்மனியில் வாழும் தமிழ்பேசும் மக்கள் மத்தியில் சந்தர்ப்பவாத அரசியலை நடத்திக்கொண்டும் சுயவிளம்பரம் செய்து கொண்டும் வெளிவரும் சஞ்சிகைகளின் நடுவே, தாம் கொண்டுள்ள முற்போக்கு புரட்சிகர கொள்கைகளில் உறுதியான நிலைப்பாடு கொண்டு, எதிர்ப்புக்கள் பயமுறுத்தல்கள் வந்தபோதும் கலங்காது மயங்காது தமது சுதந்திரமான கருத்துக்களை வெளிப்படையாக எடுத்துவரும் "சிந்தனை" பத்திரிகை ஐந்




...ாம் ஆண்டு நிறைவு செய்வதையிட்டு ...ஜனம்" தனது புரட்சிகர வாழ் ... தெரிவித்துக் கொள்கிறது.

தொடர்புகட்கு—

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# எமது எண்ணங்கள்

தமிழ் பேசும் மக்களின் அரசியல் வரலாற்றில் காலத்துக்கு காலம் எத்தனை மாற்றங்கள் ஏற்பட்டபோதும் அவற்றினூடாக முன்னேற்றங்கள் ஏற்படுவதற்கு பொது எதிரியிடமிருந்தோ அல்லது தமிழ் பேசும் மக்களின் மத்தியிலிருந்தோ தடைக்கற்கள் தோன்றிக் குழம்பிக்கொண்டே வந்திருக்கின்றன. எது எப்படி இருப்பினும் அரசியல் மாற்றங்கள் ஏற்பட்டிருக்கின்றன ஏற்படுகின்றன என்பது மட்டும் உண்மை. அந்த வரிசையில் இன்றைய நிகழ்வுகளில் இந்தியப்படையின் வெளியேற்றமும், விடுதலைப்புலிகளின் ஜனநாயக பிரவேசமும் முக்கியத்துவப் படுத்தப்படுகின்றன. அமைதியும் சமாதானமும் நிலைக்க அனைத்து இயக்கங்களும் ஜனநாயகப்பாதைக்கு திரும்புவதும், ஐக்கியப்படுவதும் எப்போது ஏற்படப்போகிறது, எப்போது நாம் வழமைக்குத் திரும்புவோம் என்று ஏங்கிக்கொண்டிருக்கும் மக்களின் மத்தியில் இந்த ஜனநாயகப் பிரவேசம் சிறு ஆறுதலைத் தரக்கூடியதும் வரவேற்கப்படக் கூடிய ஒன்றுமாகும்.

இரண்டு வருடங்களுக்கு முன்பு மாகாண சபை என்ற சொல்லைப் பயன்படுத்தி சிறிலங்கா அரசு அனைவரையும் ஜனநாயகத்துக்கு திரும்புங்கள் என்று பூச்சாண்டி காட்டியது. இயக்கங்கள் ஆயுதரீதியில் எதிர்ப்புரட்சிகர சக்திகளின் தவறான அணுகுமுறைகளினால் பலவீனமானதைப் பயன்படுத்தி இந்தியாவும் அதற்கு ஒத்தூதியது. மாகாண சபை அமைக்கப்படுவதும் ஆயுதப்பிரியர்களான இயக்கங்கள் ஜனநாயகத்துக்கு வருவதும் நடக்கமுடியாத ஒன்று என்றெண்ணியே சிறிலங்கா அரசு மாகாண சபையை அன்றைய காலத்தின் நகர்த்தலாக அறிமுகம் செய்தது. ஆனால் சிறிலங்கா அரசினை பெரும் சிக்கலுக்குள் மாட்டிவிட்டதுபோல் இயக்கங்கள் ஜனநாயகத்துக்கு திரும்பின, தேர்தல் நடாத்தவேண்டிய நிர்ப்பந்தத்திற்கு அரசு தள்ளப்பட்டது, மாகாண சபை அமைக்கப்பட்டது. அன்றைய காலகட்டத்தில் விடுதலைப்புலிகள் ஜனநாயகத்திற்கு திரும்பியிருப்பின் இடையில் ஏற்பட்ட அனைத்து அழிவுகளும் தவிர்க்கப்பட்டிருக்கும் மாகாண சபையின் அதிகாரங்களை பெறக்கூடிய வெற்றி பெற்றிருக்க முடியும். வடக்குகிழக்கில் அமைதி நிலையை உருவாக்கியிருக்க முடியும். இந்திய இராணுவத்தை இதைவிட வேளைக்கே அனுப்பும்படி இலங்கை அரசை அனைத்து இயக்கங்களுமே அறைகூவல் விடுத்திருக்கமுடியும். இவற்றை எண்ணிப்பார்க்கும்போது விடுதலைப்புலிகளின் கடந்தகால அரசியல்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

விடுதலைப்புலிகளின் இன்றைய அரசியல் ஜனநாயகப் பிரவேசமும் அதையொட்டி நடைபெறும் நிகழ்வுகளும், வரும் அறிக்கைகளும் அதிர்ச்சியும், வியப்பும் அடையவைக்கின்றன. ஏனைய இயக்கங்கள் ஜனநாயகத்திற்கு திரும்பியபோது அவற்றுக்கு எதிராக விடுதலைப்புலிகளினால் எடுக்கப்பட்ட ஆயுத நடவடிக்கைகள் ஏனைய இயக்கங்களையும் தற்பாதுகாப்புக்குவேண்டி ஆயுதம் ஏந்த நிர்ப்பந்தித்தன. 83க்குப் பின்னிருந்து ஏனைய இயக்கங்கள் மீதான விடுதலைப்புலிகளின் ஆயுத நடவடிக்கைகள்தான் தொடர்ந்து வந்திருக்கின்றன. இவற்றை சில இயக்கங்கள் தவிர்த்துக்கொள்ள முனைந்ததை பலவீனமாக விடுதலைப்புலிகள் கணித்து ஆயுத அராஜகத்தை தொடர்ந்ததால் ஏனைய இயக்கங்களும் விடுதலைப்புலிகளுக்கெதிராக ஆயுதமேந்தவேண்டிய நிர்ப்பாக்கிய நிலை ஏற்பட்டது.

இது காலகட்டத்தில் இயக்கங்கள் தங்களுக்குள் மோதுகின்றன என வர்ணிக்கப்பட்டது. இயக்கங்கள் ஜனநாயகத்துக்கு திரும்பிய பின்பும் விடுதலைப்புலிகளின் இந்நடவடிக்கை தொடர்ந்தது. இந்நிகழ்வுகளை கூர்ந்து கவனிக்கும்போது இயக்கங்களின் மீதான ஆயுதநடவடிக்கைகளை தொடர்ந்து வந்திருக்கும் விடுதலைப்புலிகள் இவற்றை நிறுத்தும்பட்சத்தில் ஏனைய இயக்கங்கள் விடுதலைப்புலிகளுக்கெதிரான ஆயுதமேந்தலை தவிர்க்க அல்லது நிறுத்தவாய்ப்புண்டு. அதன் பின்பும் வேறுஇயக்கங்கள், இயக்கங்களுக்கிடையில் ஆயுதப்பிரயோகத்தை மேற்கொண்டால் அவர்கள் மக்கள் மத்தியில் இனம் காணப்படுவார்கள். விடுதலைப்புலிகள் மட்டும் தான் மற்றைய இயக்கங்கள் மீது ஆயுதங்களைப்பிரயோகிப்பவர்கள் என்பதும் பொய்யாகிவிடும்.

ஒரு இயக்கம் அரசியல் கட்சியாக பதிவுசெய்து ஜனநாயகத்துக்கு திரும்பும்போது சுதந்திரமான தனது கருத்துக்களை மக்களிடம் கொண்டு செல்வதற்கும், மக்கள் சுதந்திரமாக கருத்துக்களை வெளியிடுவதற்கும் இடமளிக்கப்படுவதோடு ஏனைய ஜனநாயக அரசியல் கட்சிகளுக்கும் இக்கட்சியால் எந்த ஜனநாயக மறுப்பும் ஏற்படக்கூடாது. ஆனால் விடுதலைப்புலிகள் ஜனநாயகத்துக்கு திரும்புகிறோம் என்று கூறிக்கொண்டு ஏனைய அரசியல் கட்சிகளை அழித்தொழிக்கும் நடவடிக்கையாக ஆயுதநடவடிக்கைகளை மேற்கொள்வது, அரசியல் கட்சியாக மாறியபின்பும் இராணுவப்பிரிவொன்றை வைத்துக் கொண்டிருப்பது உலகத்திலேயே இது ஒரு புதிய ஜனநாயகமாகத்தான் தோற்றமளிக்கிறது. இதன் பின்விளைவுகள் நிச்சயமாக அமைதியைத் தோற்றுவிக்கப் போவதில்லை என்பது தெளிவாகிறது..

பொது எதிரி எப்போதுமே பிரித்தாளும் தந்திரத்தை பிரயோகிக்கத் தவறியதில்லை. இந்த வரிசையில் இன்று விடுதலைப்புலிகளை தமது பக்கம் வைத்துக்கொண்டு அரசு காய்களை நகர்த்துகிறது. இதில் இரு முக்கிய தேவைகள் பூர்த்திசெய்யப்பட முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. ஒன்று தம்மைப்பிரச்சனைக்குள் மாட்டிவி

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

சியல்ரீதியாக போராடிவரும் ஜனநாயக சக்திகளையும் அழிப்பது. இரண்டாவது இலங்கைத்தீவில் புரட்சிகர சக்திகளை அழிப்பதற்கு சர்வதேச பிற்போக்கு சக்திகளுடன் கைகோர்த்துக்கொண்டு தெற்கில் யு.என்.பியும், வடக்குகிழக்கில் விடுதலைப்புலிகளும், மலையகத்தில் தொண்டமான் குழுவும் பணிகளை மேற்கொள்வது. முதலாவது பணியை மேற்கொள்ள அரசு முனைவதால் ஒரு கல்லில் இரண்டு மாங்காயை அடித்துவிடும். அரசுடன் விடுதலைப்புலிகள் எவ்வளவு தூரம் ஒத்துப்போகிறார்கள் என்று பார்ப்போம்.

பொதுமக்களிடம் இருக்கும் ஒவ்வொரு பொருட்களின் பெறுமதிக்கும் 25% கப்பம் விடுதலைப்புலிகளினால் வாங்கப்படுகின்றது. ஒரு மிளகாய்ச் செடிக்கு 1ரூபா வீதமும், ஆடு மாடுகளுக்கு விலைக்கேற்ப கப்பம் என்று இப்படியே பட்டியல் நீண்டுகொண்டே போகின்றது. அண்மையில் மாகாண சபை உறுப்பினர் ஜோர்ச் தம்பிராசா விடுதலைப்புலிகளினால் திருகோணமலையிலுள்ள இலங்கை இராணுவ முகாமருகில் பதுங்கியிருந்து சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார். செட்டிகுளம் என்னுமிடத்தில் அமைந்திருந்த PLOT போராளிகளின் முகாமை இலங்கை ஆயுதப்படைகளின் முழு ஒத்துழைப்புடன் சுற்றிவளைத்து பாரிய தாக்குதலை மேற்கொண்டமை, மட்டக்களப்பு மாவட்டத்தில் EROS போராளிகளின் முகாம்களை சுற்றிவளைத்து அவர்களின் ஆயுதங்களை பறிமுதல் செய்துவிட்டு அடித்து துரத்தியமை, மாகாணசபை உறுப்பினர்களின் குடும்பங்களுக்குக் கொலைமிரட்டல் செய்தமையால் பத்து உறுப்பினர்கள் பயத்தின் நிமித்தம் பதவி விலகியுள்ளமை, இந்த இரண்டு வருடங்களுக்கு மேலாக சிவில் நிர்வாக தடைகளை ஏற்படுத்தி மக்களுக்கு கஸ்டங்களை ஏற்படுத்திய விடுதலைப்புலிகள் இன்று மாகாண சபை சிவில் நிர்வாகத்தை நடத்தும்போது இவர்கள் அரச உத்தியோகத்தர்களை அழைத்து தாந்தோன்றித்தனமாக நிர்வாக ஆணைகளை பிறப்பித்து வருகின்றனர். இவைகள் எல்லாம், புலிகளின் அரசியல் பிரவேசத்தின் பின்பு நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற சம்பவங்கள்.

"விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணி" தலைவர் திரு கோ-மகேந்திரராசா (மாத்தையா) பத்திரிகையாளர்களின் கேள்விக்கு பதிலளிக்கையில் சிறிலங்கா இராணுவம் இனிமேல் தமிழ் மக்களைத் தாக்குவோ, இனக்கலவரம் ஏற்படவோ இடமில்லை என்று கூறியுள்ளார். சிறிலங்கா பேரினவாதிகளின் இன ஒழிப்பு நடவடிக்கைகள் உலகம் அறிந்த ஒன்று. இதை எதிர்த்துத்தான் விடுதலைப்புலிகளும் ஆயுதமேந்திப் போராட முற்பட்டதாக கூறினார்கள். இன்று திடீரென்று ஏன் இந்த ஞானோதயம்? இவர்களை இப்படி மாற்றிய சூத்திரதாரிகள் யார்? என்று சிந்திக்கத் தூண்டுகின்றது. இன்னொரு கேள்விக்குப் பதிலளிக்கையில் ஏனைய இயக்கங்கள் ஆயுதங்களைக் கீழேபோடும் பட்சத்தில் தேர்தலில் நிற்க அனுமதிப்போம் என்று கூறியுள்ளார். தமது கட்சியில் இராணுவப்பிரிவு இருக்கும், இராணுவப்பிரிவுக்கு திரு பிரபாகரன் அவர்கள் தளபதியாக இருப்பார் என்றும் கூறியுள்ளார். ஆனால் ஏனையவிடுதலை அமைப்புக்கள் ஆயுதங்களைக் கீழேபோடவேண்டும் என்ற

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

க்காகத்தான் பார்க்கமுடிகிறது.

இலங்கை அரசு இராணுவத்தை வடக்கு கிழக்குக்கு அனுப்பினால் நாம் அதை எதிர்த்துப் போராடுவோம் என்கிறார்கள், போராடுகிறார்கள் "தேசிய சபையில்" உள்ள விடுதலை அமைப்புக்கள். இலங்கை அரசாங்கத்துடன் கைகுலுக்கி உறவாட முடிந்த விடுதலைப் புலிகளுக்கு ஏனைய போராட்ட விடுதலை அமைப்புக்களுடன் ஒரு மேசைக்கு வந்து கருத்து முரண்பாடுகளை பேசித் தீர்க்க முடியவில்லை. ஆனால் பொது எதிரியுடன் கைகோர்த்துக்கொண்டு இயக்கங்களிடமிருந்து ஆயுதங்களை களவு செய்த இலங்கை ஆயுதப்படைகளுடன் இணைந்து செயல்ப்படுவதோடு இப்யாசிஸப் படைகள் இனிமேல் தமிழ்பேசும் மக்களைத்தாக்காது என்று உத்தரவாதம் அளிக்கின்றனர்.

விடுதலைப்புலிகள் ஏனைய விடுதலை இயக்கங்களின் முகாம்களை அழித்தால் அது உள்வீட்டுப் பிரச்சனை என்கிறது இலங்கை அரசு. ஏதோ போராட்ட அமைப்புக்கள் தங்களுக்குள் மோதுவதுதான் பிரச்சனை, இவர்களுடைய மோதல்களைத்தீர்த்துவிட்டால் வடக்குகிழக்கில் அமைதி ஏற்பட்டுவிடும் என்று இலங்கை அரசு நீலிக்கண்ணீர் வடிப்பதுடன் இலங்கைத்தீவில் தமிழ் பேசும் மக்களுக்கு எந்த ஒடுக்குமுறைகளோ, உரிமைகள் மறுக்கப்படும் நிலையோ இல்லை அவர்கள் ஒரு உண்மையான "சோஉலிச ஜனநாயகக் குடியரசுக்குள் சுதந்திரத்துடனும், சுபீட்சத்துடனும் வாழ்ந்துகொண்டிருக்கிறார்கள், இயக்கங்களினுடைய பிரச்சனைகளை தீர்த்துவிட்டால் சரி" என்று தனது வெளியுலக பிற்போக்கு கூட்டாளிகளினூடாக எமது உண்மையான பிரச்சனைகளை மூடிமறைக்க முற்பட்டிருக்கின்றது. பார்த்தீர்களா எங்களுடைய உண்மையான பிரச்சனைகள் எப்படி தலைகீழாக மாற்றப்பட்டுள்ளதென்று.

விடுதலைப்புலிகளின் இவ்விசித்திரமான ஜனநாயகப்போக்கும், இவர்களைப் பாவிக்கும் பௌத்த பேரினவாத அரசின் குள்ளத்தனமான நடவடிக்கைகளும் மக்களுக்கு அமைதி சமாதானத்தை தேடித்தருவதற்கு பதிலாக இரத்த அபாயத்தை கோடிட்டுக் காட்டுகின்றன...

---

புரட்சியில் வெற்றி பெறுவதற்கு மக்கள் திரளின் ஆதரவு நமக்கு இருந்து தீரவேண்டும். ஒரு முழுமையான பெரும்பான்மை எப்போதும் இருக்க வேண்டும் என்கிற அவசியமில்லை; ஆனால் வெற்றி பெறுதற்கும் அதிகாரத்தை எடுத்துக் கொள்வதற்கும் தொழிலாளி வர்க்கத்தின் பெரும்பான்மையினர் மட்டுமின்றி உழைக்கும் சுரண்டப்படும் கிராமப்புற மக்களில் பெரும்பான்மையினர் இருப்பதும் அவசியமாகும்.

தோழர்—லெனின்.

www.tamilarangam.net

# தனித்துவம் பேணப்பட வேண்டும்

கோவலனி
பதுளை

இந்திய வம்சாவளி தமிழ் மக்களும் அவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளும்!

1947,/48,ஆம் ஆண்டுகளில் கொண்டுவரப்பட்ட குடியுரிமை, பிரஜாவுரிமை, சட்டங்களின் மூலம் இந்நாட்டின் முதுகெலும்பாக இருந்துவரும் இந்திய வம்சாவளித் தோட்டத் தொழிலாளர்களின் அடிப்படை உரிமைகளைப் பறித்தமைக்கெதிராக அம்மக்கள் மத்தியிற் செயற்பட்டு வரும் தொழிற் சங்கங்கள், வெகுஜன ஸ்தாபனங்கள், மற்றும் இடதுசாரி இயக்கங்கள், கட்சிகள் என்பன தொடர்ச்சியாக எழுச்சிக்கோரிக்கைகளை காலத்திற்கு காலம் முன் வைத்து வந்துள்ளன. ஆனால் இவ்வடிப்படை மனித உரிமைகளை மீளப் பெற்றுக் கொள்ளுவதற்காக தனியான ஓர் போராட்டத்தை தனித்தோ அல்லதுகூட்டாகவோ மேற்கொள்ள எந்த ஒரு ஸ்தாபனமும் முயற்சி எடுக்கவில்லை மாறாக அவ்வப்போது தனித்தோ, அல்லதுகூட்டாகவோ, சில தொழிற் சங்க கோரிக்கைகளை முன் வைத்து மேற்கொண்ட வேலை நிறுத்த போராட்டங்களின் போது சில வேளைகளில் பிரஜாவுரிமை கோரிக்கையும் ஏனைய கோரிக்கைகளுடன் ஒன்றிணைக்கப்பட்டுள்ளதை வரலாறு கூறுகின்றது.

எனினும் 1977,ஆம் ஆண்டிற்குப் பின்னர் வட கிழக்கு மக்களின் மத்தியில் எழுந்த தேசிய இனப் போராட்டம் மும்முரம் அடைந்ததனாடாக தோன்றிய ஒரு சில இடதுசாரி போராட்ட இயக்கங்கள் தமது கோரிக்கைகளுடன் இந்திய வம்சாவளித் தமிழ் மக்களின் அடிப்படை மனிதவுரிமைப் பிரச்சினையான பிரஜாவுரிமைப் பிரச்சினையையும் ஓர் முக்கிய கோரிக்கையாக முன் வைத்தன. இது தொடர்பாக வட கிழக்குப் பகுதிகளில் தனியான ஆர்பாட்டங்கள் மற்றும் சர்வதேச ரீதியாக ஆர்பாட்டங்களையும், பாரிய பிரச்சாரங்களையும் மேற்கொண்டன.

இதன் பின்னர் புதிய வடிவத்திற் சர்வதேச கவனத்தை இப் பிரச்சினை ஈர்த்தது நாகரீக உலகின் மத்தியில் இலங்கை தலை குனியநேர்ந்தது. இவ் வேளையுல் ஆளும் கட்சியில் அங்கம் வகித்த இலங்கை தொழிலாளர் காங்கிரசின் பிரதிநிதி, திரு. எஸ். தொண்டமான் அவர்கட்கு இப் பிரச்சினை தொடர்பாக அரசுடன் பேச்சுவார்த்தை மேற்கொள்ள மேற்கூறிய சம்பவங்கள் ஒரு உந்து சக்தியாக அமைந்தன.

பல்வேறு குறைபாடுகளுக்கு மத்தியில் மலையகத்திலும் ஏனைய பகுதிகளிலும் வாழும் இந்திய வம்சாவளித் தமிழ் மக்கள் (இந்திய குடியுரிமைக்கு விண்ணப்பித்தவர்கள் நீங்களாக) மேற் கூறிய பின்னனியின் விளைவாக இலங்கையின் பதிவுப் பிரஜைகளாகவும் தகுதியை கடந்த வருடம் பெற்றனர்.

பாராளுமன்றத்தின் மூலம் ஒரு சில திருத்தச் சட்டங்களைக் கொண்டு வருவதன் மூலமே இப் பிரச்சினைகளுக்கு உடனடி தீர்வைக் காணலாம். முதலில் இன்று நடைமுறையிலிருந்துவரும் இலங்கை நிர்வாக சட்டத்தில் திருத்தமொன்றினைக் கொண்டுவரச் செய்யவேண்டும் அதாவது இந்திய வம்சாவளிப் பிரஜைகள் தாம் இலங்கை பிரஜை என்பதை உறுதிப்படுத்தும் முகமாக பிரஜாவுரிமைச் சான்றிதழ்களை சமர்ப்பிக்க வேண்டும் என இருக்கும் வாசகத்தை நீக்கி அதற்கு பதிலாக ஏனைய பிரஜைகளைப்போல் இவர்களும் பிறப்புச் சான்றிதழ்களைச் சமர்பித்தல் போதும் எனக் கூறும் வாசகத்தை ஒன்றினை கொண்டுவரச் செய்யவேண்டும் இதனைப்போன்று கல்வி மாணிய சபை நாட்டின் ஏனைய மாணவர்களிடம் கோரும் சான்றிதழ்களை மட்டும் கோரினால் போதும் என ஒரு திருத்தச் சட்டத்தை கொண்டுவரவேண்டும் இதனை ஏனைய அரச

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# பிரச்சினைகள் தொடருமா?

இவ்வுடன்படிப் பிரச்சனைகள் தீர்த்துக் கொள்வதன் மூலம் இந்திய வம்சாவளி மக்களின் பிரச்சினைகள் தீர்ந்து விடுமா? அல்லது தீர்ந்து விட்டனவா என்ற கேள்வியை நாம் எழுப்ப வேண்டும். இவ்வாறு எழுப்புவதன் மூலம் எதிர்காலத்தில் முகம் கொடுக்க நேரிடும் பிரச்சினைகளை இன்றே காணலாம்.

இலங்கை சுதந்திரமடைந்த நாள் முதல் இன்றை வரை நம்நாட்டி எழுந்த போராட்டங்களை நோக்குவோமாயின் சிறுபான்மை தேசிய இனம் சம அந்தஸ்து கோரி போராடிய போராட்டமே பிற்காலத்தில் உக்கிரமான போராட்டமாகப் பரிணமித்து தனி நாட்டிற்கான போராட்டமாக மாறியதை நாம் அனைவரும் அறிவோம். கல்வி வேலைவாய்ப்பில் சம அந்தஸ்து, காணிப்பகிர்வில் சம அந்தஸ்து என்பனவையே இதன் அடிப்படை கோரிக்கைகளாக அமைந்திருந்தன.

நாடு சுதந்திரமடைவதுடன் இந்திய வம்சாவளித் தமிழ் மக்களின் குடியுரிமையும் பிரஜாவுரிமையும் பறிக்கப்பட்டமையினால் அடிப்படை உரிமைகளையே இழந்த இம்மக்களுக்கு மேற்கூறிய பிரச்சினைகள் ஓர் பூதாகரமான பிரச்சினையாக அண்மைக்காலம் வரை எழவில்லை. மாறாக வட-கிழக்கைத் தாயகமாகக் கொண்ட தமிழ் மக்களுக்கு இது ஓர் பாரிய பிரச்சினையாக இருந்தது. இதற்காக இம்மக்கள் பல போராட்டங்களை மேற்கொண்டனர். இதன் பயனாக தமிழ் மக்களின் தேவையை பூர்த்தி செய்யவில்லை, அல்லது நியாயமான முறையில் நடைமுறைப்படுத்தவில்லையெனக் கூறலாம். இவையே சுயநிர்ணய உரிமைப் போராட்டத்திற்கு வித்திட்டது.

## விகிதாசார ஒதுக்கீடும்– இந்திய வம்சாவளி மக்களின் தனித்துவமும்

தமிழ் மக்களுக்கான ஒதுக்கீடுகள் என கணித்தபோது இந்திய வம்சாவளித்தமிழரையும் உள்ளடக்கியே கணிக்கப்பட்டது. 1970 ஆம் ஆண்டு வரை இவ்வொதுக்கீடுகள் ஓர் பாரிய பிரச்சினையாக எழவில்லை, ஏனெனில் 1964 ஆம் ஆண்டு கொண்டு வரப்பட்ட சிறிமா–சாஸ்திரி ஒப்பந்தத்தின் பின்னரே மலையக மக்கள் மத்தியில் விழிப்புணர்வு அதிகரித்ததுடன் கல்வியிலும் அதிக சிரத்தை காட்டப்பட்டுள்ளது. எழுபதுகளில் இவர்கள் மத்தியில் கல்வி கற்ற இளைஞர்களும் யுவதிகளும் அதிகரித்த போதிலும் அரச மற்றும் கூட்டுத் தாபன வேலைவாய்ப்புகளை நாடும் போது வட-கிழக்கிலிருந்து வரும் படித்த இளைஞர்களுடன் இவர்களால் கல்வி ரீதியில் போட்டியிட முடியவில்லை, மற்றும் ஒதுக்கீடுகளிலும் அளிக்கப்பட்ட வடகிழக்கைச் சார்ந்தவர்களுக்கே, முன்னுரிமையும் அளிக்கப்பட்டது. எழுபதுகளில் ஆரம்பிக்கப்பட்ட இப்பிரச்சினை மலையக கல்வி கற்ற இளைஞர்களைப் பொறுத்தளவில் இன்று ஓர் பூதாகரமான பிரச்சினையாக வளர்ந்துள்ளது. பிரஜாவுரிமை வழங்கலோடு இப்பிரச்சினை மேலும் அதிகரிக்குமேயன்றி குறைந்து செல்வதைக் காண முடியாது.

இரண்டு தசாப்தங்கள் கழிந்தாலும் வட-கிழக்கைச் சார்ந்த மக்களின் கல்வி மற்றும் சமூக உறவுகள் என்பனவற்றிற்கு நிகராக ஓர் சம அந்தஸ்தை மலையக மக்கள் பெற்றுக் கொள்ள முடியாது.

---

நன்றி–:

வீரகேசரியில் "குறிஞ்சிப்பரல்கள்" பகுதியில்

திரு– [illegible]

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# இந்திய வம்சாவளி தமிழ் மக்களும் அவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளும்.

இந்திய வம்சாவளி தமிழ் மக்கள் தமது தனித்துவத்தை பேணுவதுடன் அதனை தேசிய ரீதியில் நிலைநிறுத்த வேண்டிய தேவை இன்று ஏற்பட்டுள்ளது. இல்லையெனில் எதிர்காலத்தில் பெரும் நெருக்கடிகளை எதிர்நோக்க நேரிடும். இற்றைக்கு நூற்றி ஐம்பது வருடங்களுக்கு முன்பே தென்னிந்தியாவிலிருந்து கொண்டுவரப்பட்ட இந்திய தமிழ் மக்கள் மூன்று நான்கு தலைமுறைகளைக் கடந்த பின்னரும், நாட்டின் ஏனைய தமிழ் பேசும் மக்களுடன் இரண்டறக் கலக்கவில்லை. வடகிழக்குப் பிரதேசங்களில் சென்று குடியமர்ந்த பின்னரும் பெரும்பாலும் அங்கு வாழும் பூர்வீக தமிழ்மக்களிலிருந்து பிரிந்து ஓர் தனித்துவமான மக்கள் கூட்டமாக இருப்பதை இன்றும் காண முடிகிறது. மொழி ரீதியாகவும் கலாச்சார ரீதியாகவும் (ஒரு சில ரீதியில்) ஒத்த தன்மை காணப்பட்ட போதிலும் பூர்வீகத் தமிழ் மக்களுடன் இரண்டறக் கலக்கவில்லை தனித்துவமாகவே வாழ்ந்து வருகின்றனர். வந்தேறும் குடிகளாக ஒரு நாட்டில் குடியமர்ந்த மக்கள் பல தலைமுறைகளைக் கடந்ததுடன் அந்நாட்டின் பிரஜைகளாகவும் தனித்துவமான இனமாகவும் அங்கீகரிக்கும்படி போராடி வெற்றி பெற்றமையை உலக ரீதியாக காண முடிகின்றது. அதேவேளை இனவிகிதாசார அடிப்படையில் இன ஒதுக்கீடுகளையும் பெற்றுக் கொண்டுள்ளனர். இந்திய வம்சாவளி தமிழ் மக்களை பொறுத்தளவில் கடந்த நூற்றி ஐம்பது வருடங்களுக்கு மேலாக தனித்துவமாக வாழ்ந்தது, மூலம் தாம் ஏனைய தமிழ் பேசும் மக்களிலிருந்து தனித்துவமானவர்கள் என்பதை நிரூபித்துள்ளனர். இத்தனித்துவத்தை சட்ட ரீதியாக ஓர் தனியான சிறுபான்மை ரீதியாக ஓர் தனியான சிறுபான்மை இனம் என அங்கீகரிக்கச் செய்வதே இன்றுள்ள தலையாய கடமையாகும். இதனை அங்கீகரிக்கச் செய்வதன் மூலமே தனியான ஒதுக்கீடுகளைப் பெற்றுக் கொள்ள முடியும். பொதுவாக இனவிகிதாசார அடிப்படையில் தமிழ் மக்களுக்கு ஒதுக்கீடுகளை வழங்கும் போது பல்வேறு வழிகளில் பின்தங்கியுள்ள இந்திய வம்சாவளி மக்களுக்கு போதியளவு பிரதிநிதித்துவத்தைப் பெற்றுக் கொள்ள முடியாமல் செல்வதை எழுபதுகளிலிருந்து நடைமுறை ரீதியாகக் காணமுடிகின்றது. எனவே இதனை நடைமுறை ரீதியாக கண்டறிந்த இன்னுமொரு சிறுபான்மை இனமான தமிழ் பேசும் முஸ்லிம் மக்கள் தமக்கென தனியான இனவிகிதாசார ஒதுக்கீட்டைப் பெற்றுக் கொள்ள சிந்தித்தமை குறிப்பிடத்தக்கது.

## எழுபதுகளின் பின்

ஆயுதப் போராட்டத்தை இந்திய வம்சாவளி மக்கள் மேற்கொள்ளாவிட்டாலும் ஜனநாயக ரீதியில் பல்வேறு நிர்ப்பந்தங்களை தொடர்ச்சியாக மேற்கொண்டு வந்துள்ளனர். ஆகையால் கிடைத்த பிரஜாவுரிமையின் பயனை உண்மையாக அனுபவிக்க வேண்டுமாயின் இந்நாட்டில் வாழும் இந்திய வம்சாவளி மக்கள், ஏனைய தமிழ் பேசும் மக்களிலிருந்து தனித்துவமானவர்கள் என்பதை சட்டரீதியாக நிலைநிறுத்தச் செய்ய வேண்டும்.

எழுபதுகளின் இறுதியில் இவ்வாறான பிரச்சினைகளுக்கு மலையக இளைஞர்கள் முகம் கொடுத்தனர். இதன் அனுபவப் பின்னணியின் காரணமாக இம்மக்கள் மத்தியில் தோன்றிய இயக்கங்கள், தனிநபர்கள் மலையக மக்கள் ஓர் சிறுபான்மையினம் என்ற கருத்தினை முன் வைத்தனர். குறிப்பாக மலையக மக்கள் இயக்கம் இந்திய வம்சாவளிப் பேரவை கூட்டணி என்பன இக்கருத்தினை வலியுறுத்தியமை குறிப்பிடத்தக்கது. அக்கால கட்டத்தில் கொழுந்து விட்டெரியும் பிரச்சினையாக பிரஜாவுரிமைப் பிரச்சினை இருந்தமையினால் மக்களினதும் அரசியல் வாதிகளினதும் கவனம் இதன் பால் திரும்பவில்லை மேலும் அக்கால கட்டத்தை பொறுத்த மட்டில் இது ஓர் பூரணத்துவம் பெறாத கோரிக்கையாக

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# கல்வித்தகைமைகளில் சலுகை.

. . . . . . . . . . . . . . . . . . . . .

இனவிகிதாசார ஒதுக்கீட்டைப் பெறுவதன் மூலம் குறிப்பிட்ட காலம் வரை அதனை பூரணமாக இம்மக்களால் அநுபவிக்க முடியாது. ஏனெனில் நாட்டின் ஏனைய தமிழ் பேசும் மக்களுடன் மலையக இந்திய வம்சாவளி மக்களின் கல்வியில் மிகவும் பின்தங்கியுள்ளமை யாவரும் அறிந்த உண்மை. உலகின் ஏனைய பின்தங்கிய நாடுகளுடன் ஒப்பிடுகையில் எமது நாட்டின் கல்வித்தரம் உயர்ந்துள்ளதுடன் கல்வி கற்றோரின் எண்ணிக்கையும் அதிகரித்துள்ளது. ஆனால் இந்திய வம்சாவளி மக்கள் மத்தியில் நூற்றுக்கு அறுபது வீதத்திற்கு அதிகமானோர். ஆரம்பகல்வியை பெற முடியாத நிலையிலுள்ளனர், ஆகக்கூடிய கல்வியாக நூற்றுக்கு இருபது வீதமானோர், க.பொ.த(சாதாரண) வகுப்பு வரை படித்துள்ளனர். மேலும் பல்கலைக்கழகம் சென்று பட்டம் பெற்ற பட்டதாரிகளை விரல் விட்டு எண்ணி விடலாம்.

கடந்த சில வருடங்களுக்கு முன்னர் தோட்ட பாடசாலை ஆசிரியர்களுக்கான விண்ணப்பங்களை கோரும் போது க.பொ.த (சாதாரண) பரீட்சையில் சித்தியடைந்தோரும் விண்ணப்பிக்கலாம். எனக் கூறிய போதும் பொரும்பாலும் க.பொ.த(உயர்தர)ப் பரீட்சையில் சித்தியடைந்தோருக்கே முன்னுரிமை வழங்கப்பட்டது. இதனால் க.பொ.த(சாதாரண)ப் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களில் ஒரு சிலரை தவிர பெரும்பாலானோர் இவ்வேலை வாய்ப்பையும் இழந்தனர். எனவே இவ்வாறான நடைமுறைச் சிக்கல்களை நோக்கும் போது ஏனைய நாடுகளில் வாழும் பின்தங்கிய மக்கள் சமூகத்தினருக்கு வழங்கும் சலுகைகளைப் போல் இந்திய வம்சாவளி மக்களுக்கும் வழங்கும்படி நிர்ப்பந்திக்காவிடின் ஓர் நீண்ட காலம் செல்லும் வரை இம்மக்கள் மத்தியிலிருந்து ஓர் புதிய தலைமுறை எழமுடியாது. எனவே குறிப்பிட்ட வெற்றிடங்களை பொறுத்த மட்டில் விசேட சலுகைகளை இம்மக்களுக்கு அளிக்க வேண்டும். தோட்ட பாடசாலை ஆசிரியர் எழுதுவினைஞர், கிராம சேவகர் போன்ற வெற்றிடங்களை பொறுத்த வரையில் இம்மக்களுக்கு முன்னுரிமை வழங்கலாம். அதாவது விண்ணப்பங்க கோரும் போது இந்திய வம்சாவளி இளைஞர்கள் க.பொ.த.(சாதாரண)ப் பரீட்சையில் சித்தியடைந்திருந்தால் போதுமானது என ஓர் சட்டத்தை கொண்டு வரச் செய்ய வேண்டும்.

இந்திய வம்சாவளி தமிழ் மக்கள் எதிர் நோக்க நேரிடும் இப்பாரிய பிரச்சினைகளை தூர நோக்குடன் சிந்திக்கும் அனைத்து மலையக தொழிற்சங்க வாதிகள் அரசியல் வாதிகள் மற்றும் வெகுஜன ஸ்தாபனங்களைச் சார்ந்த பிரதிநிதிகள் இவ்விடயத்தில் தீவிர அக்கறை கூர்ந்து ஐக்கியத்துடன் செயல்பட வேண்டும். இதனை நிறை வேற்ற வேண்டுமாயின்.

1. பல் இனங்கள் வாழும் இந்நாட்டில் இந்திய வம்சாவளித் தமிழ் மக்கள் தனித்துவமான ஓர் சிறுபான்மை இனம் (நாஷனல் மைனாரிட்டி) என்பதை தேசிய ரீதியாக செய்யும் பொருட்டு தேசிய ரீதியாகவும் சர்வதேச ரீதியாகவும் பிரசாரத்தை மேற்கொள்ள [illegible]

2. நாம் வாழும் இந்நாடு தமக்குச் சொந்தமானது என்ற எண்ணத்தை முறையியல் ரீதியாக இம்மக்கள் மத்தியில் வார்த்தெடுக்க வேண்டும்.

3. மேற்கூறியவற்றை அங்கீகரிக்கும் படி கோருமாறு தற்போது பாராளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் இந்திய வம்சாவளி மக்களின் பிரதிநிதிகள் இடதுசாரி பிரதிநிதிகள் என்போரை வற்புறுத்த வேண்டும்.

4. பாராளுமன்றத்திற்கு வெளியே இக்கருத்தினை தனிப்பாக வட-கிழக்கைச் சார்ந்த

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# தினம் சுக்குநூறுகிறார்

கவிதை

மடாலயங்களும் மசூதிகளும்
பட்டமாளிகைகளும் பட்டமுதலாளிகளும்
சினிமாப்படங்களும்
மக்களை
சிந்திக்கவிடாது சிறைப்பிடித்தன
கொடுத்துக்கொடுத்து சிவந்த கரத்து
கொடை வள்ளல்கள் தோன்றினர்
பிச்சை
எடுத்து ஏற்று பெற்று தொழுது
மறந்தனர்
கலையென்றும் கடவுளென்றும்
காசாக்கினர்
சிலந்தி வலையென்று அறியார்
சிக்கினர் அதனுள்
முதலாளித்துவத்தின் பல வேலை
விஞ்ஞானம் வளர்க்க
வளர்ச்சியின் உயர்ச்சியை நுகராடியா
வாழ்நிலையுள்ளோர் அதன்
சுழற்சியில் தினம் சுக்குநூறுகிறார்
காரணம் அறிந்தோர் வரைவுடன்
தரவுகள் வகுத்துக் கூறியும்
வருந்திக்கொள்கிறார் திருந்தாமலே
இவ்வெறிந்த நிலையே சரித்திரமாக
ஒருமைப்படுத்த இரும்பென்ற தலைமை

உதிரத்தில் தொடர்கிறார்
தொழிலாளிகளெனவே.

வே. ஆ. சுப்பர்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# ஒரு கோடாலிக் கதை

"உலக விமர்சனம்" என்ற புதிய தமிழ் சஞ்சிகையின் வெளியீட்டு விழா 6-1-90 சனிக்கிழமை அன்று பிராங்போர்ட்டில் நடைபெற்ற பொழுது நானும் ஒரு பார்வையாளராகக் கலந்து கொண்டேன். இந்த விழாவில் சிறப்புரை நிகழ்த்திய திரு-வன்னை ஆனந்தன் தன் பேச்சுக்கிடையில் ஒரு சிறிய கதையொன்றைக் கூறினார்.
அந்தக்கதை இதுதான்.

— — — — — — — பல மரங்கள் நிறைந்த ஒரு காட்டில் ஒரு பெரிய மரமும் சிறிய மரமும் இருந்து வந்தன. ஒரு நாள் ஒரு மரம் வெட்டி அவ்வழியே வந்தான். கையில் பிடியில்லாத கோடாலியை வைத்திருந்த அவன், சுவாரஸ்யமாக சிகரட் புகைத்தபடி, அங்கு நின்ற மரங்களை ஒரு நோட்டமிட்டான். அவனைக்கண்டவுடன் சின்னமரம், சிணுங்கி அழத்தொடங்கியது. உடனே பெரியமரம் "நீ ஏன் அழுகிறாய்" என்று அதைக்கேட்டது. அதற்கு சின்ன மரம் "எங்களை வீழ்த்திறவன் வந்திருக்கிறான் இன்றையோட நாங்களெல்லாம் தொலைஞ்சம்" என்று அழுதபடி சொன்னது. உடனே பெரிய மரம் சிரித்துவிட்டு "அசடே பயப்படாதே மரம் வெட்டியின் கையில் கோடாலி மாத்திரம் இருக்கிறது" பிடி இல்லை பிடியில்லாத கோடாலியால் எங்களை வெட்டமுடியாது. எனவே நாங்கள் கவலைப்படத் தேவையில்லை" என்றது. பெரியமரம் இப்படிச்சொன்னவுடன் சின்ன மரத்திற்கு ஆறுதலாகவும், மகிழ்ச்சியாகவுமிருந்தது:
இதற்கிடையில் சற்று தூரம் நடந்த மரம்வெட்டி, ஒரு இடத்தில் நின்று அங்கிருந்து சுற்றும் முற்றும் பார்த்தான். ஒரு மரமொன்றில் கிளையொன்று நீண்டு நேராக வளர்ந்திருந்ததை அவனது கண்கள் அவதானித்தன. உடனே அவனுக்கு ஒரு யோசனை தட்டியது. அந்த மரத்தருகே சென்றவன் தனது பேனாக்கத்தியை எடுத்து நீளமாக வளர்ந்திருந்த அதன் கிளையை வெட்டி எடுத்தான். பின் அதை தனது கோடாலியில் பொருத்திப் பிடியாக்கினான்.
பிடி பொருத்திய கோடாலியுடன் மரம் வெட்டி வருவதைக்கண்டதும், பெரிய மரம் அழத்தொடங்கியது. "அங்கே பார் அவன் கோடாலிக்குப் பிடி போட்டுக்கொண்டு வாறான் இனி எங்களுக்கு அழிவுதான்" என்று அது அழுதது.
இதைக்கேட்ட சின்னமரம் "தனிக் கோடாலியை வைத்துக்கொண்டு அவனால் எங்களை அழிக்கமுடியவில்லை. எங்கடை ஆள் ஒருவன் தலையைக்கொடுத்தபடியால் தான் எமக்கு ஆபத்து வருகிறது" என்று கவலையோடு கூறியது — — — —

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தற்போதைய நிலையும் நமது நாட்டு நிலைமைகளுக்கு ஒத்த கதையாகவே இது இருக்கிறது.
எமது மக்களை வெடிச்சாய்க்க நினைக்கும் சிறிலங்கா அரசின் கோடாலிக் காம்புகளாக மாறிக் கொண்டிருப்பவர்கள் இந்தச் சந்தர்ப்பத்திலாவது இதை உணர வேண்டுமென்பதே எனது பிரார்த்தனை ஆகும்.

வி. ஞானசேகரன்,
பிராம்போர்ட்.

---

# நடந்த போராட்டம்

கவிதை

கேட்ட வேட்டுச் சத்தத்தில்
தேசம் முழுவதும் திரும்பிப் பார்த்தது

விடுதலைப் போரின் ஊடான சரித்திரத்தில்
அது ஓர் இரத்த அத்தியாயம்
துப்பாக்கியின் துவாரங்கள் வழியே
அவர்களின் ஆதிக்கம் வழிந்தது

கொடும்பாவியின் பொம்மையல்ல கொழுத்தப்பட்டது
புரட்சிப் போராளிகளே கொழுத்தப்பட்டனர்

ஒரு இனத்தின் விடுதலை எரிமலையின்
குழம்புகள் வீழ்த்தப்பட்டது

சரித்திரம் அதனைப் பாடம் என்றது
ஏகாதிபத்தியம் அதனை மென்று விழுங்கியது
பயங்கரவாதத்தின் முதல் சகாப்தம்
போராளிகளின் வீட்டுக் காற்றைக்கூட
கைது செய்ய முயற்சி எடுத்தது.
ஈழம் என்று சொன்னவர்களை
ஊமையாகச் சொல்லி உத்தரவு பிறப்பித்தது
தேசமெங்கும்
ஒற்றர்களின் திருவிழாக்கள்
அடக்குமுறையின் அரக்கப்பிடியில்
மக்கள் திணறினர்கள்
இது ஒரு நாள் --------
சூரியன் முழு முகம் காட்டாத
முன் காலைப் பொழுதில்
நடந்த போராட்டம்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# ராஜீவுக்கு -ஈழத் தமிழரின் பகிரங்க கண்ணீர்க் கடிதம்.

[சவூதி அரேபியா நாட்டில் இருக்கும் இலங்கைத் தமிழர் ஒருவர் பிரதமர் ராஜீவ் காந்திக்கு கடிதம் ஒன்றை எழுதியுள்ளார். டாக்டர் ஆர். நரேந்திரன் என்ற அந்தத் தமிழர்-பிரதமருக்கு எழுதிய பகிரங்க கடிதத்தை 'இந்தியன் எக்ஸ்பிரஸ்' நாளேடு (14.11.89) முழுமையாக வெளியிட்டிருக்கிறது. இந்தக் கடிதத்தில் சில பகுதிகளை மேற்கோள் காட்டி, நேற்றைய விடுதலையில் கழகப் பொதுச் செயலாளர் அறிக்கை விடுத்திருந்தார். அந்தக் கடிதத்தின் முழு விவரமும் இங்கே தமிழில் தரப்படுகிறது.]

அன்புள்ள திரு. ராஜீவ் காந்தி, இலங்கைத் தமிழர்களாகிய நாங்கள், இந்தியர்களைவிட, உங்களின் எதிர்கால அரசியல் கணிப்பில் மிகவும் ஆவலுடையவர்களாக இருக்கிறோம். இது உங்களுக்கு ஆச்சரியத்தைத் தராது என்றே நம்புகிறேன். எங்கள் மக்களின் எதிர்காலம், உங்கள் அரசியல் எதிர்காலத்தோடு தொடர்புடையதாக இருப்பதால், நீங்கள் வெற்றி பெற வேண்டும என்றே நாங்கள் இயற்கையாக விரும்பியிருக்கவேண்டும். ஆனால், எங்கள் பிரச்சினையில் நீங்கள் மேற்கொண்ட கடந்த கால நடவடிக்கைகள், எங்களை இதற்கு எதிராக முடிவெடுக்கும் நிலையை ஏற்படுத்திவிட்டது. நீங்கள் வெற்றி பெற்று வந்துவிடக்கூடாதே என்று நாங்கள் இப்போது அஞ்சுகிறோம். இங்கு ஒரு ஈழத் தமிழனாவது நீங்கள் மீண்டும் பிரதமராக வேண்டும் என்று நினைத்தால் அவன் ஈழத் தமிழர்களின் துரோகியாகவே கருதப்படுவான். இப்போதைய நிலையில் நீங்கள் வெற்றி பெற்றால், நாங்கள் தோற்றுவிடுவோம்; நீங்கள் தோற்றால்தான் நாங்கள் வெற்றி பெறமுடியும்.

'இந்து' நாளேட்டின் இணையாசிரியர் திரு. என். ராம், போஃபோர்ஸ் பீரங்கிபேர ஊழலில் உங்களுக்குள்ள தொடர்பை அம்பலப்படுத்துவதில் பெரும் பங்காற்றியிருக்கிறார்.

உங்களைச் சந்தித்ததற்குப் பிறகு, உங்கள் மீது அவர் வைத்திருந்த மரியாதை குறைந்துவிட்டதாக, அவர் ஒரு பேட்டியில் கூறியிருந்தார். ஆனால், ஈழத்தமிழர்களாகிய நாங்கள், உங்கள் மீது மரியாதை இழந்து நீண்டகாலமாகிவிட்டது. உங்கள் மீது மரியாதை இழப்பதற்கு ராம் அவர்களைப்போல் உங்களை நேரில் சந்திக்க வேண்டிய அவசியமில்லை. ஈழப்பிரச்சினையில் நீங்கள் மேற்கொண்ட நடவடிக்கைகளைப் பார்த்தாலே போதும். எனக்குக்கூட ஆச்சரியமாக இருக்கிறது; இதே 'இந்து' பத்திரிகை, இலங்கைப் பிரச்சினையில் நீங்கள் மேற்கொண்ட தவறான நடவடிக்கைகளை, மூடிமறைப்பதற்குத் துணைபோனபத்திரிகைதான். இப்போது போஃபோர்ஸ் 'குருக்ஷேத்திரத்தில்' இறங்குவதன் மூலம் தனக்கு ஏற்பட்ட களங்கத்தைத் துடைத்துக்கொள்ள நினைக்கிறது போலும். பண்டிட் நேரு 'இந்து' பத்திரிகையை 'மவுண்ட்ரோடு நிதானமுதாட்டி' என்று கூறினார். அந்தமுதாட்டி, தனக்கு மனசாட்சி என்று ஒன்று இருக்கிறது என்பதை இப்போதுதிடீரெ

ஆச்சரியமாகத்தான் இருக்கிறது.

போஃபோர்ஸ் பிரச்சினையில் நூறு கோடி ரூபாய் ஊழல் ராஜீவ் நடவடிக்கையால் - இலங்கை வடகிழக்கில் தேவையில்லாமல் இழக்கநேர்ந்த ஆயிரக்கணக்கான உயிர்களுக்கு முன் எம்மாத்திரம்! தமிழ்மக்களின் சமூக- பொருளாதார அமைப்பையே சீர்குலைத்தது ராஜீவின் நடவடிக்கை. போஃபோர்ஸ் ஊழலைவிட, இது மிகப்பெரும் அவலம்!

காந்தி அடிகளின் பாரம்பரியத்தை நவீன இந்தியாவில் சீரழித்தவர் என்ற முறையில் நீங்கள் வரலாற்றில் கருதப்படுவீர்கள்; 5 ஆண்டு காலத்தில் பிரதமராக இருந்து நீங்கள் செயல்பட்டதே இதற்குப் போதுமானது.

உங்களையும், உங்கள் தேசத்தையும் நம்பியிருந்த மக்களுக்கு நீங்கள் துரோகம் செய்தீர்கள்; இதற்கு முன் இப்படி ஒரு துரோகம் வரலாற்றில் நடந்தது இல்லை.

அக் 1987க்குப் பிறகு ஈழத் தமிழர் பகுதியில் நடந்த கொலைகளிலும், கற்பழிப்புகளிலும், சூறையாடல்களிலும் உங்கள் 'கை' இருக்கிறது.

தமிழ் மக்களின் பேராதரவைப் பெற்ற போராளிக்குழுக்களுக்கு எதிராக, ஒழுக்கக்கேடான யுத்தத்தைத் தொடர்ந்து உங்களுக்கு துதிபாடும் குழுக்களை ஊக்கப்படுத்தி, வளர்த்துவிட்டது உங்களது 'கை'.

உங்களுக்கு வசதியான ஒரு முடிவைப் பெறுவதற்காக, வடக்கு, கிழக்கு மாநிலங்களில் முறைகேடாக தேர்தலை

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இலங்கை அதிபரோடு ஒப்பந்தத்தை உருவாக்கியபிறகும் அதற்கு முன்பும் இருந்த உண்மை நிலையை திரையிட்டு மறைத்ததோடு, இந்தியத் தகவல் நிறுவனங்கள் வழியாக பொய்ச் செய்திகளைப் பரப்புவதற்கு துணை போனது உங்கள் 'கை'.

'அமைதிப்படை' நடவடிக்கையின் விளைவுகளால் உண்டான உயிர்ச்சேதத்தையும் பொருள் சேதத்தையும்மறைத்தது உங்கள் 'கை'.

உங்களுக்கு ஆதரவாக 'தமிழ் தேசிய ராணுவம்' என்று சொல்லப்படும் ஒரு ராணுவத்தை உருவாக்கத் திட்டமிட்டு, அதற்காக பல தமிழ் இளைஞர்களை, அவர்கள் விருப்பத்துக்கு மாறாக கடத்தியது உங்கள் 'கை'.

வடக்கு- கிழக்கில், நிரந்தரமாக ரத்த ஆறு ஓடுவதற்கு அடித்தளம் போட்டது உங்கள் 'கை'; எங்கள் மண்ணிலிருந்து 'அமைதிப்படை' வெளியேறினாலும் எங்கள் சமூகத்தில் கிரிமினல் நடவடிக்கைகளும், பயங்கரவாதங்களும் தொடர்ந்து நடக்கச் செய்திருப்பது உங்கள் 'கை'.

தாயகத்தின் விடுதலைக்காகவும், சமத்துவத்துக்காகவும், சுயமரியாதைக்காகவும் நிற்கும் மக்களின் உறுதியை அழிக்க முயற்சிப்பது உங்கள் 'கை'.

இந்திய ராணுவம் ஈழத்தில் நிலை கொண்டிருப்பதை உலகத்தின் கண்கள் முன்னால் மறைப்பது உங்கள் 'கை'.

இந்தியாவின் பெருமையைக் குலைத்தது எது? 'அமைதி' எனும் தத்துவத்துக்கே புதிய வியக்யானம் செய்தது எது? தமிழ் மக்களின் பாதுகாப்பை சீர்குலைத்தது எது? எல்லாமே உங்கள் 'கை'; இதை எவ்வளவு பணத்தை செலவிட்டாலும் மூடிகட்டி விடமுடியாது.

எதிர்க்கட்சிகள் இந்தப் பிரச்சினையை தேர்தல் களத்தில் வைக்காமல் இருக்கலாம். அப்படிச் செய்தால் உங்களாலும், உங்களது அமைப்பாலும், 'தேச விரோதிகள்' என்ற முத்திரை குத்தப்படும் என்ற அச்சமாக இருக்கலாம்; அல்லது இந்திய ராணுவத்தை அரசியலுக்கு இழுக்கக் கூடாது என்றநோக்கமாகஇருக்கலாம். உங்களின் தவறான போக்குகளால் பாதிப்புக்குள்ளான பல்லாயிரக்கணக்கான தமிழர்களின் சார்பில், நான் எதிர்க்கட்சிகளுக்கு விடுக்கும் வேண்டுகோள் என்னவென்றால்-இந்தப் பிரச்சினையை துணிச்சலோடு தேர்தல் களத்தில் வைக்க வேண்டும் என்பது தான்.

உங்கள் நடவடிக்கையால் என்னுடைய பாசத்துக்குரிய தாயையும், சகோதரனையும் நான் இழந்தவன். உங்கள் நடவடிக்கையால் நான், எனது சொந்த ஊருக்கு திரும்பமுடியாத நிலையில் இருப்பவன். பல்லாயிரக்கணக்கான தமிழர்களின் சார்பில் நான் ''வேண்டுவது'' எல்லாம், நீங்கள் தோல்வி அடைய வேண்டும் என்பதே! எங்களுடைய 'தலை விதி'யை நிர்ணயிப்பதில் உங்களுக்கு எந்த உரிமையும் இனி இருக்கக் கூடாது.

-இவ்வாறு அந்தக் கடிதத்தில் ஈழத்தமிழரான டாக்டர் ஆர். நரேந்திரன் கூறியிருக்கிறார். சவூதி அரேபியாவில் உள்ள 'அல்-ஹசா' எனும்ஊரிலிருந்து இந்த பகிரங்க கடிதத்தை அவர் எழுதியிருக்கிறார்.

# டாக்டர் நரேந்திரனு-க்கு பகிரங்க பதில் கடித

சவுதிஅரேபியாவிலிருந்து டாக்டர் (வைத்தியர்) நரேந்திரன் அவர்கள் இந்தியாவிலிருந்து வெளிவரும் இந்தியன் எக்ஸ்பிரஸ் ஆங்கிலப்பத்திரிகைக்கு எழுதிய "ஈழத்தமிழர் பிரச்சனை பற்றிய ஒருதலைப்பட்சமான கட்டுரை" ஒன்றுக்கு இலங்கைத் தமிழர் என்ற வகையில் சில விளக்கங்களுடன் கூடிய பதில் கட்டுரை ஒன்றினை இந்தியன் எக்ஸ்பிரஸ் ஆங்கிலப்பத்திரிகைக்கு அனுப்பியுள்ளதோடு மற்றும் இந்தியாவில் வெளிவரும் முக்கிய பத்திரிகைகளுக்கும் "வெகுஜனம்" சஞ்சிகைக்கும் இக்கட்டுரையின் பிரதிகள் அனுப்பியுள்ளேன். தங்களின் அடுத்த வெளியீட்டில் எனது கட்டுரையை வெளியிடவும்.

www.tamilarangam.net

டாக்டர் நரேந்திரனுக்கு, சக இலங்கையன் ஒருவனால் எழுதப்படும் ஒரு திற
ந்த கடிதம்.

அன்பான டாக்டரே (வைத்தியரே)

நவம்பர் 14 1989 இந்தியன் எக்ஸ்பிரஸ் இதழில் பிரசுரமான பிரதமருக்
கு எழுதப்பட்ட உங்களின் திறந்த கடிதம் பற்றி இது எதிர்க்கட்சியினரது ஒரு
தேர்தல் மோசடி என சந்தேகிப்பதற்குரிய காரணங்கள் உண்டு. உண்மையிலே
யே இப்படிப்பட்ட ஒருவர் உள்ளாரா என்பதை நிச்சயம் செய்யும் பொரு
ட்டு இக்கடிதத்தை உங்களுக்கு பதிவுத்தபாலில் அனுப்புகிறேன். பத்திரிகாதர்
மத்தை சோதிக்க இக்கடிதத்தின் பிரதிகளை இந்தியன் எக்ஸ்பிரஸ் உட்பட
எல்லா பிரபல பத்திரிகைகளுக்கும் அனுப்புகிறேன்."

நீங்கள் பிரதமருக்கு எழு
திய கடிதத்தில் கண்ட விடயங்கள் பற்றிய எனது மறுப்பை ஆரம்பிக்கு முன்
எனது மனமார்ந்த அனுதாபத்தை தயவாய் ஏற்றுக்கொள்ளவும்.

எனது மருமகனொருவனை IPKF இன் நடவடிக்கைகளின் பொழுதும், எதிர்
க்கருத்துக் கொண்டிருந்த மன்னிக்க முடியாத பாவத்துக்காக LTTE யின்
கரங்களால் நெருங்கிய உறவினர் ஒருவரை இழந்திருப்பதால் உங்களது
மனவேதனையை என்னால் புரிந்து கொள்ள முடிகிறது. உரிய நேரத்தில் ஏற்
றதாக்கீடு ஏற்பட்டிருக்காவிட்டால் இந்நேரம் எனது சகோதரனும் அவர்
குடும்பத்தினரும் கூட LTTE யின் கரங்களால் நான் மடிந்தது பற்றி மன
வேதனைப் பட்டுக் கொண்டிருப்பார்கள்.

நாம் புதைந்துள்ள சகதியிலிரு
ந்து விடுவித்துக்கொள்ள, இந்திய மக்களதும், முக்கியமாக தமிழ்நாட்டிலுள்ள எம
து சகோதரர்களது நல்லெண்ணமும், ஒத்துழைப்பும் எமக்குத்தேவை என நா
ன் இன்னமும் உணர்வதால் நாம் எந்தவொரு வகையிலும் இந்தியாவின் எந்
தவொரு பகுதியையோ, கட்சியையோ பகைத்துக் கொள்ளும் வகையில்
அவர்கள் நாட்டு அரசியல் விவகாரங்களில் ஈடுபடக்கூடாது என்பது எனது
திட்டவட்டமான முடிவாதலாலும், இந்நாட்டில் நான் ஒரு அன்னியனும், விருந்
தாளியுமாய் இருப்பதாலும் தேர்தலின் பின்னர் இந்திய ஆட்சியை யார்
பொறுப் பேற்றாலும் அதன் பின் யார் இந்தியாவின் அடுத்த பிரதமராக வரு
வார் என்பதைப் பற்றி நான் சிறிதேனும் கவலைப்படவில்லை. எமது ஜீவமரண
போராட்டத்தை தமது கட்சி அரசியலுக்குச் சார்பாகப் பயன்படுத்த முயலும்
உள்நாட்டு அரசியல் கட்சிகளுடன் எமது சில போராட்ட இயக்கங்கள் கூட்டு
ச்சேர்ந்து செய்த பிழையையே நீங்களும் விடுகின்றீர்கள்.

அன்பான வைத்தியரே,

உங்கள் முகற்பதியில் "தேர்தலின் பின் இந்தியாவின் பிரதம மந்திரியாக
திரு- ராஜீவ் காந்தி தொடர்ந்து இருப்பதை நம்பும் எந்த ஒரு சிறிலங்கனும்
(இலங்கையனும்) அவனது மக்களால் ஒரு துரோகி என கருதப்படுவான். நீர்
(ராஜீவ் காந்தி) வென்றால் நாம் தோற்போம். நீர் (ராஜீவ்) தோற்றால் நா
ம் வெல்வோம்" என்று குறிப்பிட்டுள்ளீர்கள். இந்தியா வலிமை மிக்க ஒரு பிரா
ந்திய அரசு என்பதையும், தமிழ் நாட்டில் உள்ள எம் சகோதரர்கள் இவ்வ
ரசின் ஒரு பகுதி என்பதையும் வைத்தியரே உங்களுக்கு நினைவூட்டுகின்றேன்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தவிட்டிருக்கும் பட்சத்தில் ,"தமிழ் மக்களால் பேராதரவு காட்டப்படுபவர்கள்" என உங்களால் வர்ணிக்கப்பட்ட LTTE யினர் இதற்கு கீழ்ப்படிந்திருக்கவேண்டும். தமது இலங்கையுடைய அகிம்சை வழியில் போராட்டத்தைத் தொடர்ந்திருக்க வேண்டும். இது தமிழ்நாட்டில் உள்ள எமது சகோதரரை எழுச்சி கொள்ளச் செய்து, அவர்கள் உடன்படிக்கையினைத் தமது திருப்திக்கேற்ப அமுல் செய்ய இந்திய அரசை நெருக்கியிருப்பார்கள். நான் கூறுகின்றேன் தமது திருப்திக்கேற்ப என, ஏனெனில் அவர்கள் தமிழரின் பொதுக் கருத்தைப் பற்றி ஒருபோதும் கவலைப்படவில்லை. அத்துடன் தமிழர் நிராயுதபாணிகளாக தமது நிலைமை அப்படியே பணிவுடன் ஏற்பார்கள் என எதிர்பார்த்தார்கள். மாற்றுக்கருத்துக் கொண்டோருக்கு நடந்தது பற்றி உங்களுக்கும் தெரியும் என நான் நிச்சயம் நம்புகின்றேன். அகிம்சை வழியில் தமது போராட்டத்தை தொடர்வதை விட்டுவிட்டு," அதுவரை தமிழ் பொதுமக்களுடன் நட்புடனும் மரியாதையுடனும் பழகிய IPKF இனரைத் தாக்கி, இலங்கைத் தமிழர் ஒருபோதும் ஏற்றுக் கொள்ளாத போர் ஒன்றினுள் எம்மை இழுத்து விட்டார்கள். எமது பகுதி நன்கொடைகளால் வாங்கப்பட்ட ஆயுதங்களை, பொதுஎதிரியுடன் போராடிக் கொண்டிருந்த மற்ற இயக்கங்களை அழிக்கவும் ,IPKF இனருக்கு எதிராகவும், மாற்றுக் கருத்துள்ளவர்களைத் துரோகிகளைக் கண்டிக்கின்றோம் என்ற போர்வையில் ஒழிக்கவும் பயன்படுத்தினர்கள். இது நம்பிக்கைத் துரோகம் இல்லையானால் இதை எப்படி அழைப்பது வைத்தியரே? ஆயுத பலம் தனிய தமக்கே என்ற இலக்கில், பொது எதிரியை எதிர்த்துப் போராட வாங்கிய ஆயுதங்களை என்று மாசுபடுத்தினார்களோ அப்போதே தமிழ் மக்களிடமிருந்து கருணையையோ அன்றி விசுவாசத்தையோ எதிர்பார்க்கும் உரிமையை இழந்துவிட்டனர். தனியாட்சி வெறிகொண்ட LTTE தலைமையினால் பறிக்கப்பட்ட இளம் வாழ்வுகள் ஸ்ரீலங்கா இராணுவத்தினால் அழிக்கப்பட்டதைவிட அதிகம் என்பது உங்களுக்குத் தெரியும் . எதிரியை விரட்டியடிக்க உதவியிருக்கக்கூடிய இளைஞர்கள் தனியாட்சி வெறிபிடித்த LTTE தலைமையினால் அழிக்கப்பட்டனர். எல்லா இயக்கங்களும் ஒன்று சேர்ந்து பொது எதிரிக்கெதிராக போராடியிருக்கும் பட்சத்தில், நாம் சுதந்திர ஈழம் ஒன்றை ஸ்தாபித்திருக்கக் கூடும் இந்தியாவும் தலையிட்டிருக்காது. தமிழ் ஈழம் சாத்தியமாகும் நிலையில் மற்றைய இயக்கங்கள் மீதான தமது தாக்குதல்களால் அதைக்கலைய வைத்த இந்த நம்பிக்கைத் துரோகிகளே. உண்மையான துரோகிகள் என்பதை இப்போதாகிலும் உங்களால் உணர முடியவில்லையா?

எமது விசுவாசத்தைக் காட்டிக் கொடுத்தவர்களாகிய LTTE யினர் துரோகிகளெனவும், தமதுபாதுகாப்பையும், ஆர்வங்களையும் திடப்படுத்தும் நோக்கிலான இந்தியாவின் தலையீட்டிற்கு இவர்களே பொறுப்பு என நான் கருதுவதாலும், திரு- ராஜீவ் காந்தியை நம்பிக்கைத் துரோகி எனவோ, திரு-ராஜீவ் காந்தி தொடர்ந்து பிரதம மந்திரியாக இருப்பதை எதிர்பார்க்கும் ஸ்ரீலங்கா தமிழன் ஒரு துரோகி என்ற உங்கள்

www.tamilarangam.net

"ஒப்பரேசன் லிபரேசன்" விடுதலைப் போராட்டம் என்ற பெயரில் சிறிலங்கா அரசால் தொடரப்பட்ட போதும் தமது கோட்டை வடமராட்சியினைக் காக்கமுடியாது வெருண்டடித்துப்போன LTTE யினர் ஏனைய தமிழ்ப்பகுதிகளையும் காத்திருப்பார்கள் என நீங்கள் நம்புகின்றீர்களா? இந்தியாவின் தலையீட்டினால்தான் நாங்கள் இன்று உயிரோடு இருக்கிறோம் என்றால் அது LTTE இனரின் இராணுவ வல்லமையிலோ, ஒரு போதுமே தென்படாத அவர்களின் (SAM) ஏவுகணைகளிலோ அல்ல இந்தியாவின் தலையீட்டினாற்றான்.

LTTE யினரின் முழு நோக்கு தமிழ் ஈழமாக இருந்திருந்தால், மற்றைய இயக்கங்களை சகோதரத்துவத்துடன் இணைத்து சுதந்திர தமிழ் ஈழத்தை உருவாக்கி ஒரு தேர்தலின் மூலம் விருப்பையும் வாக்கையும் (வேட்கையையும்) அறிந்து தமிழ் ஈழ அரசுக்கான அரசியலமைப்பு சட்டத்தை அதன் மூலம் அமைத்திருப்பார்கள். ஆனால் அவர்கள் முழு நோக்கும் எப்படியாவது ஆதிக்கத்தைப் பெறல் என்பதால் "பெரும்பான்மைத் தமிழ் மக்களால் ஆதரிக்கப்படுபவர்கள்" தமிழ் மக்களிடையே தமக்குள்ள ஆதரவு குறித்துச் சந்தேகப்படுவதால், தமது நோக்கத்திற்கு எதிராகவுள்ள எல்லாவற்றையும் அழித்தொழிக்கத் தீர்மானித்ததோடு, சிங்கள ஆயுதப்படைகளுக்கு மடைகளைத் திறந்து விட்டது. இவை எல்லாவற்றிற்கும் முடிசூடும் வகையில் முதல மாகாண சபையின் கீழ் இயங்கிய இரு பொதுத் தொண்டர்ப்படை முகாம்களை எமது பொது எதிரியின் இராணுவத்துடன் கூட்டாகச் சேர்ந்து தாக்கியதுடன், பாதுகாப்பு நிறைந்த உல்லாச புரிகளான சிறிலங்கா முகாம்களிலும், சிங்களக் கிராமங்களிலுமிருந்து தாக்குதல்களை நடத்துகின்றனர்.

எந்த ஒரு உடன்படிக்கையையும் ஏற்றுக் கொள்ளும் பட்சத்தில், அதனை நிறைவேற்றும் உத்தரவாதத்தை இந்திய அதிகாரவரையில் அவர்கள் சிறிலங்கா சிங்களத் தலைவர்களுடன் பேச்சு வார்த்தைகளில் பங்குபற்றுவதற்கு மறுத்தனர் என்பதை வைத்தியரே உங்களுக்கு நினைவூட்ட விரும்புகிறேன். எடுக்கப்படும் எந்த ஒரு ஒப்பந்தத்தையும் மீறி அவர்கள் நிச்சயமாக நடப்பார்கள், எனவே சிறிலங்காத் தலைவர்கள்மேல் எமக்கு நம்பிக்கையில்லை என அவர்கள் பலமுறை வற்புறுத்தியதால், திம்பு, பெங்களூர், பேச்சுக்கள் இந்திய அரசின் ஆசியுடன் இடம்பெற்றன. ராஜீவ் காந்தியா அல்லது பிரபாகரனும், LTTE தலைமையுமா துரோகிகள் என்பதைப்பற்றி வைத்தியரே நீங்கள் நிர்ணயிக்கமுடியுமா? "சண்டே" 11- 17 பங்குனி 84 பக்கம் 24, 25 இல் "சண்டே" நிருபருக்கு பிரபாகரனின் பேட்டியைக் குறிப்பிடுகின்றேன்.

கேள்வி.- வட்டமேசை சமரச முயற்சிகள் திட்டவட்டமான ஒரு தீர்வுக்கு வழிவகுக்கும் என நீங்கள் எண்ணுகின்றீர்களா?

பதில் - நான் நினைக்கிறேன் வட்டமேசை சமரச முயற்சிகள் தமிழர் விடயங்களுக்கு ஒரு திட்டவட்டமான நிரந்தர தீர்வுக்கு வழிவகுக்காது என்று. பலவாண்டு அனுபவத்தை அடிப்படையாகக் கொண்டதே எமது இந்த இந்தநோக்கு. தமிழர் பிரச்சனைகளுக்கு ஏற்ற ஒரு தீர்வைக்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

[illegible]

www.tamilarangam.net

போதும் எடுத்ததில்லை. தற்போதைய சமரச முயற்சிகளுக்கும் இதே கதிதான் ஏற்படும். எந்த வடிவிலான தமிழரின் பிரதேச சுயாட்சிக்கும் எதிராக அனைத்து முக்கிய சிங்களக் கட்சிகளும், பௌத்த சங்கங்களும் உள்ளன. சிறு சலுகைகளைக்கூட அவர்கள் எதிர்க்கிறார்கள். இப்படியிருக்கையில் பொருத்தமான எதுவும் இம்மகாநாட்டிலிருந்து எழப்போவதில்லை.

கேள்வி — விடுதலைப் போராட்டம் பின்னடைவதற்கு (TULF) தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர்களே பொறுப்பு என நம்புகிறீர்களா? துரோகிகள் என அவர்களை நோக்குகிறீர்களா?

தமிழர் விடுதலைக் கூட்டணியினரின் சந்தர்ப்பவாத அரசியல் விடுதலைப் போராட்டத்தை பின்னடையச் செய்கிறது என்பது உண்மையே. போராட்டத்தைத் தொடர அவர்கள் ஒருபோதுமே எந்த ஒரு திட்டவட்டமான அடிகளும் எடுத்ததில்லை. மாறாக பொய்களை நம்பவைத்து மாயைகளைக் காட்டி எமது மக்களை நிரந்தரமாக தமது கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்க முயல்கின்றனர். தமது சுயநலத்துக்காக மட்டுமே அவர்கள் அரசியலில் பிரவேசித்தனர். எமது பாதிக்கப்பட்ட மக்களை விடுவிக்கும் உண்மையான எண்ணம் அவர்களுக்கு இருந்ததில்லை. ஒரு திட்டவட்டமான அரசியல் நடவடிக்கையைக்கூட அவர்கள் ஒருபோதும் முன்வைத்ததில்லை. விடுதலைப்போராட்டம் புயலில் தாழும் போதும் ... புரட்சிக்குவோம் என்று ஒருபோதும் அவர்கள் எதிர்பார்க்கவில்லை. புரட்சித் தீ, தமிழ் ஈழம் எங்கும் தீவிரமாய் பரவுகிறது. ஆனால் தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர்கள் தம்மாலியன்றளவுக்கு தீயை அணைக்க முயல்கின்றனர். இந்த வகையில், தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர்களை காட்டிக் கொடுப்பவர்களென நீங்கள் அழைக்கலாம்.

வைத்தியரே இனவெறி சிறிலங்கா அரசை தற்போது நம்பத் தகுந்ததாக அவர்களுக்கு மாற்றிய காரணம் என்ன என்பதை தயவு செய்து எனக்கு வெளிப்படுத்துவீர்களா?

யாழ்ப்பாணம் கோட்டைக்குள் நிலையூன்றியிருந்த சிறிலங்கா இராணுவ அமைப்புடன் சிநேகபூர்வ விளையாட்டு ஆட்டம் ஒன்றை ஒழுங்கு செய்தபோது பரி ஜோவான் (சென் ஜோன்ஸ்) கல்லூரி அதிபர், துரோகிப் பட்டம் சூட்டப்பட்டு சுடப்பட்டார். ஆனால் அதே சிறிலங்கா இராணுவத்துடன் பகைமைக் காலத்தில் விடுதலைப்புலிகள் வைத்துக் கொண்ட தொடர்புகள் துரோகத்தனமானவையல்ல. விடுதலைப்புலிகளினர் இந்திய அமைதிகாக்கும் படையினரை வரவேற்று அமைதிகாக்கும் படை ஜவான்களோடு அளவளாவிவிட்டு, அவர்களுடன் சேர்ந்து நின்று படமெடுத்துக் கொண்ட போதெல்லாம் அது அரசதுரோகமல்ல; ஆனால் இந்திய அரசுடனான இவர்கள் தொடர்புகள் மாறிய பின்னர், யாராவது இந்திய அமைதிகாக்கும் படையுடன் எந்த ஒரு தொடர்பு கொண்டிருந்தாலும் அவர்கள் துரோகிகள் எனப்பட்டம் சூட்டப்பட்டு கொடுமையும் நியாயமற்றதுமான தண்டனைக்குள்ளாக்கப்படுவது. இவர்கள் மற்றவர்களு

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

னிப்படையாகக்காட்டுகிறது. அனுபூதிய சந்தர்ப்பவாத நயவஞ்சக முறைகளில் தளப்பலமாக உருவாக முயற்சிப்பதை உங்களுக்குத் தெளிவாக்கும் பொருட்டு ஞாயிறு "SUN DAY" அதே இதற் பக்கம் 25இலிருந்து வெளியான பின்வருவன வற்றை எடுக்கிறேன்.

கேள்வி – ஐக்கிய அமெரிக்க நாடுகளிலிருந்து சிறிலங்காவிற்கு கிடைத்துள்ளதாகச் சொலைப்படும் வெடிமருந்து, ஆயுதங்கள் விடயம் பற்றி உங்கள் எதிர் நடவடிக்கை என்ன?

பதில் – ஐக்கிய அமெரிக்க நாடுகளிலிருந்து பெறப்பட்ட ஆயுதங்கள், தமிழர் விடுதலை இயக்கத்துக்கு மட்டுமல்ல இந்திய தேசிய பாதுகாப்பிற்கும் அபாயமானது. அமெரிக்காவின் நோக்கம் உங்களுக்கும் நிச்சயமாகத் தெரிந்திருக்கும். தனியே தமிழர் விடுதலைப் போராட்டத்தை நசுக்க சிறிலங்கா இராணுவத்தினருக்கு உதவுவது மட்டுமல்ல அவர்களது இறுதி நோக்கம் திருகோணமலையில் ஒரு கடற்படைத்தளத்தை தமது கைவசமாக்குவது. இப்படிப்பட்ட சம்பவம் இந்து சமுத்திரத்தை ஒரு போர்க்களமாக மாற்றுவதுடன் இந்த பிராந்தியத்தில் ஏற்கனவே உள்ள கொந்தளிப்பை கூட்டும்.

கேள்வி – ஈழம் கிடைக்கும் பட்சத்தில், அது எப்படிப்பட்ட நாடாக இருக்கும் என்பது உங்கள் எண்ணம்?

பதில் – தமிழ் ஈழம் சோசலிசத்தாலான ஒரு சோசலிச நாடாக அமையும். அதாவது மனித விடுதலையும், தனிநபர் சுதந்திரமும் உத்தரவாதமளிக்கப்பட்ட, எல்லாவகையான ஒடுக்குமுறையும், கொள்ளையும் முற்றாக அழிக்கப்பட்ட ஒரு சமத்துவ சமுதாயம். எமது மக்கள் தமது பொருளாதாரத்தையும், கலாச்சாரத்தையும் மேம்படுத்த முழுவாய்ப்புக்கள் உள்ள ஒரு சுதந்திர சமுதாயமாக இருக்கும். தமிழ் ஈழம் இந்தியாவின் நண்பனாகவும் அதன் எல்லையுறக் கொள்கைகளை மதிக்கின்ற, முக்கியமாக இந்து சமுத்திரத்தை ஒரு சமாதானப்பிராந்தியமாக அமைக்கும் கொள்கையை, அணிசேரா நாடுகளுக்குக் கட்டுப்பட்ட ஒரு நடுநிலை நாடாக இருக்கும்.

கேள்வி – உங்கள் கணக்குப்படி, ஈழத்தையடைய எவ்வளவு காலம் எடுக்கும்?

பதில் – ஒரு விடுதலைப் போராட்டத்திற்கு, ஒரு காலஎல்லையோ அடிப்படைத்திட்டமோ இருக்கமுடியாது. சர்வதேச அரங்கில் இடம் பெறவைக்கும் எமது தாய்நாட்டின் சூழ் நிலையிலமே எல்லாம் தங்கியுள்ளது.

இந்திய அமைதிகாக்கும் படை தமிழ் ஈழத்தில் இறங்குவதற்கு வெகுகாலத்திற்கு முன்பே பெருவாரியான தமிழ் மக்களால் ஆதரிக்கப்படுபவர்களால் எமது சமுதாயம் குற்றங்களாலும், கொடுமைகளாலும் அமிழ்த்தப்பட்டது. பத்து வருடங்களுக்கு முன்பே மற்ற இயக்கங்களை சமுதாயத்திற்கு எதிரான சக்திகள் என்று குற்றஞ்சாட்டி அழித்த காலத்திலும் பொது நிர்வாகம் என்ற பெயரில் அவர்களது "கங்காரு நீதிமன்றங்கள்" "கெல்டபோ" போல இயங்கி கொள்ளை பயமுறுத்தல், பழிவாங்கல்

www.tamilarangam.net

வைத்தியரே தமி

று மக்களால் தெரிவுசெய்யப்பட்டவர்களும், வழிநடத்தியவர்களுமான
தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர்களான அமிர்தலிங்கமும், யோகே
ஸ்வரனும் கூட நயவஞ்சகமான முறையில் இந்த இரத்த வெறிபிடித்த
விலங்குகளால் கொலைசெய்யப்பட்டார்கள். ஏனெனில் அவர்களும்கூட
போராட்ட இயக்கங்கள்போல இவர்களது தனியாட்சி வெறிக்கு தடை
யாக இருந்தனர். இவர்கள் மற்ற போராட்ட இயக்கங்களை கொலை
செய்வதில் ஈடுபட்டபோது ஏராளம் ஆயுதங்களை இழந்தார்கள். சிறி
லங்கா இராணுவத்திற்கு எதிராகப் பயன்படுத்தவென இருந்த ஆயுத
ங்களை இந்திய அமைதிகாக்கும் படைகளைத் தாக்கி மாசுபடுத்தியபோ
து மேலும் ஒர் அளவையும், இவர்கள் தமிழர் விடுதலைக் கூட்டணித்
தலைவர்களைக் கொலைசெய்தபோது எஞ்சியிருந்ததையோ அதனை
யும் இழந்து விட்டார்கள். வைத்தியரே, அறியையல்ல எங்களையே

நாம் நமது தற்போதைய துன்பங்களுக்காக குற்றஞ்சாட்ட வேண்டும்.
விடுதலைப்புலியினர் எங்கோர், ராஜீவ் தனியே ஒரு அம்புமட்டுமே. அவர்
கள் தேர்தலை பகிஷ்கரிக்க சில சாட்டுக்களை கண்டுபிடித்தனர். ஏனெ
னில் தமிழர் விடுதலைக் கூட்டணியுடனும், மற்ற போராட்ட இயக்கங்களு
டனும் அரசியல் பலத்தை பகிர்ந்துகொள்ள அவர்களுக்கு இஷ்டமில்லை.
ஒரு பொதுத் தேர்தலில் தமிழர் விடுதலைக் கூட்டணியினரும், மற்றைய
போராட்டக் குழுக்களும் குறிப்பிடத்தக்க வாக்குகளைப் பெறுவதின்
மூலம் விடுதலைப் புலிகளின் தனியாட்சி நோக்கத்திற்கு அது ஒரு அபா
யமாக அமையும் என்பதையும் அவர்கள் அறிந்திருந்தனர். முடிவாக
தமிழ் ஈழத்தில் அண்மைக்காலத்தில் உண்டான நிலைமைகளையும், இந்தி
யாவின் ஆளும் காங்கிரஸ் கட்சியும் அதன் எதிர்க்கட்சியும், இந்திய அ
மைதிகாக்கும் படையினரை திருப்பி அழைப்பதுபற்றி கொண்டுள்ள நிலை
களையும் கவனமாகக்கருதி, யார் அடுத்த இந்தியப்பிரதமராக வர
வேண்டும் என்பது பற்றி இறைவனை மன்றாடும்படி நான் உங்களைக்
கேட்கலாமா? விருந்தோம்பும் நாட்டின் உள்விவகாரங்களில் தலையி
டுவதாயிருக்கும் என்பதால் அடுத்த இந்தியப் பிரதமமந்திரியாக யார்
வரவேண்டும் என்று நான் விரும்புவதை குறிப்பிடவில்லை.
விடுதலைப்புலி

கள் மற்றைய தமிழ ஆயுதப்போராட்ட இயக்கங்களுடனும், வடகிழக்கு
மாகாண அரசின் கீழ இயங்கும் C.V.F குழுக்களுடனும், சிங்களக் கிரா
மங்கள், சிறிலங்கா இராணுவ முகாம்கள் ஆகிய பாதுகாப்பு உள்ளா
ச்சூரிகளில் இருந்துகொண்டு சிறிலங்கா அரசினால் அளிக்கப்பட்ட இரா
ணுவத்தளபாடங்களுடன், சிறிலங்கா இராணுவத்துடன் கூட்டிணைந்து
பகைமை நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளனர். இந்த நேரத்தில் கிழக்கு
மாகாணத்தில் உள்ள நிலைகளை சிறிலங்கா விமானங்களும், கெலி
கொப்டர்களும் குண்டுவீசுகின்றன. கிழக்கு மாகாணத்தில் 100வீடுகள்

www.tamilarangam.net

ராஜீவ் காந்தி "அமைதிகாக்கும் படையை முழுமையாகத் திருப்பியழைத்தல், இந்திய-இலங்கை ஒப்பந்தத்தின்படி சிறீலங்கா அரசு தனது பங்கை முழுமையாக அமுல் செய்வதிலேயே தங்கியுள்ளது" என வெளிப்படையாக திரும்பவும் வலியுறுத்தியுள்ளார். அதற்கு எதிரணியினர் நிலையானது "நாம் ஆட்சிக்கு வந்ததும் இந்திய அமைதிகாக்கும் படையை உடனடியாக வாபஸ் பெறுவோம்" என்பது.

உங்களிடமிருந்து பதில் கிடைக்கும் பட்சத்தில் உங்களுக்கு மறுபடியும் எழுதுவேன். நன்றி

F.சங்கர்

சென்னை

---

# இலக்கியச் சந்திப்பு

அலெக்ஸ்

கலை, இலக்கியம் என்பது மக்களுக்காகவே படைக்கப்படுகின்றன. அந்தவகையில் இன்றைய ஈழத்தின் சமகால யதார்த்த புலத்தின் நிகழ்வுகளை வெளிக்கொண்டுவருவதுதான் ஒரு முற்போக்கு கலை, இலக்கியப் படைப்பாளியின் கடமையாக இருக்கமுடியும். ஆனை 83 நிகழ்ப்பட்ட காலத்திலிருந்து படிப்படியாக கருத்துச்சுதந்திரம் பறிக்கப்பட்டுக்கொண்டு வந்தமையால் முற்போக்கு படைப்பாளியின் உயிர்கள் பறிக்கப்பட்டமையும் பலர் நாட்டைவிட்டு தப்பியோடியமையும் எஞ்சியிருக்கின்றவர்களின் வாய்கள் அடைக்கப்பட்டமையும் எங்கள் தேசத்தின் வரலாற்றில் கறைபடிந்த அத்தியாயங்கள். படைப்பாளிகளின் செயல்பாடுகள் முடக்கிவிடப்பட்டிருக்கிற இந்தத் துயரமான வரலாற்றின் ஓட்டத்திலே அலைகடலுக்கப்பால் குடிபெயர்ந்து அகதிகளாக வாழ்ந்துகொண்டிருக்கும் எம்மக்கள் மத்தியிலிருந்து குறிப்பிடக்கூடியளவு இல்லாவிட்டாலும் ஆங்காங்கே சிறு சிறு கலை, இலக்கியப் படைப்புக்களை ஈழத்தின் யதார்த்தபுலத்திலிருந்து படைக்கமுற்படும் முற்போக்காளர்களைக் காணக்கூடியதாகவுள்ளது பாராட்டத்தக்கது. அந்தவகையில் கடந்த ஒருவருடத்துக்குமேலாக செயல்பட்டுக் கொண்டிருக்கும் "இலக்கியச் சந்திப்பு" மேற்கு ஜேர்மனியில் வெளிவந்து கொண்டிருக்கும் சஞ்சிகையாளர்களையும், ஆக்கதாரர்களையும், வாசகர்களையும் இணைக்கும் பாலமாக இருந்துவருகின்றது:

22-12-1989 தொடக்கம் 24-12-1989 வரை மேற்கு பேர்லினில் நடைபெற்ற "6வது இலக்கியச் சந்திப்பு" மிகவும் சிறப்பானதாகவும், தேடல்களைப் புரிந்து கொள்ளக்கூடிய களமாகவும் அமைந்ததென்றால் மிகையல்ல.

மே-ஜேர்மனி, இலண்டன், நோர்வே, நெதர்லாந்து, டென்மார்க், பிரான்ஸ் ஆகிய நாடுகளில் இருந்து இந்நிகழ்ச்சிக்கு பலர் வருகைதந்திருந்தனர். மே-ஜேர்மனியில் வெளிவந்து கொண்டிருக்கும் சஞ்சிகைகளில் பு

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

யும் வெளிவந்து கொண்டிருக்கும் "சுவடுகள்", நெதர்லாந்தில் வெளிவந்துகொண்டிருக்கும் "அ ஆ இ", பிரான்சில் மகளிர் சங்க வெளியீடாக வெளிவந்துகொண்டிருக்கும் "கண்" ஆகிய சஞ்சிகைகளின் ஆசிரியர்களும், ஆக்கதாரர்களும், வாசகர்களும் வருகைதந்திருந்தனர். இவை தவிர நின்றுவிட்ட சஞ்சிகைகளான யாத்திரை, நம்நாடு, அறுவை போன்றவற்றின் ஆசிரியர்களும் வருகைதந்திருந்தனர்.

இலக்கியச் சந்திப்பு நிகழ்ச்சி நடைபெற்ற மூன்று நாட்களும் அரங்கத்தினுள் பல வகையான கருத்துக்கள், விவாதங்கள், பாடல்கள், நாடகம் என்று ஒருதொடர் சங்கிலியாக நிகழ்ச்சிகள் நடைபெற்றன. திரு வ.ஐ.ச. ஜெயபாலனின் "புலப்பெயர்வுகள்" என்னும் ஆய்வை அகப்புலப்பெயர்வு, புறப்புலப்பெயர்வு என்ற அடிப்படையில் ஆய்வுசெய்தார். இப்புலப்பெயர்வுகளை வர்க்கக்கண்ணோட்டத்துடன் ஆய்வு செய்திருந்தது அதன் தரத்தை மேலும் உயர்த்தியுள்ளது என்றுதான் கூறவேண்டும் இன் ஆய்வை இன்னும் கூடுதலான தரவுகளுடன் மேற்கொள்வதன் மூலம் ஒரு நூல்வடிவில் வெளிக்கொண்டுவரமுடியும். கலாநிதி சிவசேகரத்தின் "எழுத்தும் சமூகமும்" என்னும் ஆய்வு மரபுவழிமுறையை நிராகரிப்பதையும், கற்பதிலுள்ள கடினத்தை உணர்த்துவதாக அமைந்தது. புதியகலைச்சொற்கள் பாவிக்கப்படுவது தவிர்க்க முடியாதது என்றும், எழுத்து வடிவங்களில் புதிய மாற்றங்களை உருவாக்குவதின் மூலம் மொழியின் வளர்ச்சியை அதிகரிக்கமுடியும் என்ற தீர்மானத்தின் அடிப்படையில் ஆய்வை கொண்டுசென்றார். இருப்பினும் அவரது ஆய்விலும், கேள்வி பதிலிலும் சில விடயங்களில் தட்டிகழித்துக் கொண்டுபோகும் தன்மை தென்பட்டது. "சமதர்மமும் கனவும்" என்ற தலைப்பில் திரு சண்முகரட்ணம் (சமுத்திரன்) ஆய்வுகளை மேற்கொண்டார். அவர் தனது ஆய்வில் கிழக்கு ஐரோப்பிய சோஷலிச நாடுகளுக்கு முக்கியத்துவம்கொடுத்திருந்தார். முதலாளித்துவ சமுதாயத்துக்குள் இருக்கக்கூடிய பிரச்சனைகளுக்கு நிரந்தரத்தீர்வாக சோஷலிசமே தான் இருக்கமுடியும் என்பதையும், முதலாளித்துவம் சூழல் மாசடைதல், வேலையில்லாத்திண்டாட்டம் போன்ற இன்றைய பிரச்சனைகளுக்கு மூன்றும் மண்டல நாடுகளை எப்படிப் பாவிக்கின்றது என்பதையும், இன்று முதலாளித்துவத்திற்கு கிடைத்துள்ள தற்கால வெற்றிக்கு நடைமுறை சோஷலிசத்திலுள்ள தவறுகளும் ஒரு வகையான காரணமாகும் என்ற முடிவுக்கு வந்தார். இருப்பினும் சோஷலிச முகாம்களின் நடைமுறைத் தவறுகளை சுட்டிக்காட்டுகின்றபோது நடைமுறைத்தவறுகளுக்கான சில நிர்ப்பந்தங்களையும் கூறியிருக்கவேண்டும். ஆனால் இதை அவர் தனது ஆய்வுக்குள் எடுக்கத்தவறிவிட்டார். "இலங்கை மலைகளும் இந்திய மடுக்களும்" என்னும் ஆய்வை திரு நித்தி அவர்கள் மேற்கொண்டார். ஏறத்தாள 150 ஆண்டுகளுக்கு மேலாக மலையகத்தில் வாழ்ந்து தேசத்தை செழுமைப்படுத்திய அந்த மக்களின் துயரமான வாழ்க்கை மிகவும் வேதனையானது. சிறிமா-சாஸ்திரி ஒப்பந்தத்தினால் உறவுகள் பிரிக்கப்பட்டு இந்தியத் தெருவோரங்களில் அனாதைகளாக இன்றைய மலையக மக்களின் வாழ்க்கையைவிட பரிதாபமான வாழ்க்கையை நடத்திக்கொண்டிருக்கும் அந்த மக்களின் கண்ணீர்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

வருடியது. ஆனால் சிலர் அதை உணர்வுபூர்வமாக சிந்திக்காது நகைச்சுவை உணர்வுடன் எடுத்துக்கொண்டவிதம் மிகவும் வேதனையானது.

"நாடகத்துறை" சம்பந்தமாக திரு-பாலேந்திரா, திருமதி பா-இந்திராணி ஆகியோரது கருத்துக்களும், கலந்துரையாடல்களும், அவர்கள் நடித்த நாடகத்தின் ஒரு பகுதியை நடித்துக்காட்டிய விதமும், நாடகத்தின் கருவாக மத்தியதர வர்க்கத்திற்கு இருக்கக்கூடிய பிரச்சனைகளை புதிய பாணியில் நடித்துக்காட்டிய முறை மிகவும் பாராட்டுக்குரியதாகும்.

"பெண் ஒடுக்குமுறை" நிகழ்ச்சியின் போது பெண்கள் ஆர்வத்துடன் கருத்துப்பரிமாறல்களில் கலந்துகொண்டது நிகழ்ச்சியை சிறப்பித்தது என்று கூறலாம். பெண் விடுதலை தொடர்பான கருத்துக்களில் சில ஆண்கள் ஒடுக்குமுறைக்கான காரணிகளையோ அன்றி அதற்கான அஸ்திவாரம் எப்போது கட்டப்பட்டது என்ற விடயங்களை கண்டறிய முற்படாது வெறும் கருத்து முதல்வாத அடிப்படையில் பிரச்சனைகளை குழப்பியடிப்பது மிகவும் வேடிக்கையும் வேதனையானதும். இவ்வகையான சம்பவங்கள் ஒவ்வொரு சந்திப்பிலும் தொடர்வதாகவே இருக்கின்றது இப்படியான விதண்டாவாதங்களைத் தவிர்ப்பதின் மூலம் சரியான வழிக்கு ஆய்வை கொண்டுசெல்லமுடிவதுடன் வீணாக நேரத்தை செலவுசெய்வதையும் தவிர்க்கமுடியும்.

சிறீ லோகன் அவர்கள் "மக்களிடம் கருத்துக்களைக் கொண்டுசெல்லல்" என்னும் தலைப்பில் சஞ்சிகையாளர்களுக்கு மக்கள் விரும்பி வாசிக்கக்கூடிய வகையில் சஞ்சிகைகள் மக்களைச் சென்றடைய வேண்டும் என்ற கருத்தின் அடிப்படையில் சில விளக்கங்களைக் கொடுத்தார். அதற்கு தனது "அறுவை" பத்திரிகைக்கு ஏற்பட்ட அனுபவத்தை வைத்து மற்றைய சஞ்சிகையாளர்களுக்கு புத்திமதி கூறமுற்பட்டிருக்கும் சிறீலோகன் அவர்கள் எந்த மக்களுக்கான கருத்துக்களை, எங்கே கொண்டு செல்வது என்பதை விளக்கியிருந்தால் மிகவும் பிரயோசனமாக இருந்திருக்கும்! "கருத்துக்கள் மக்களைப்பற்றிக்கொண்டால் அது மாபெரும் சக்தியாய் உருவெடுக்கும்" என்று தோழர் மார்க்ஸ் கூறியிருந்தது உண்மைதான். அது உண்மையாகவே ஒடுக்கப்படுகின்ற, சுரண்டப்படுகின்ற உழைக்கும் மக்கள் மத்தியிலிருந்துதான் உருவெடுக்கமுடியுமே தவிர இங்கேயிருக்கின்ற மேல்தட்டு நோக்கி பாயமுற்படுகின்ற பெரும்பான்மை மக்களை ஒரு முற்போக்கு எழுத்தாளனின் பேனா திருப்திப்படுத்த முடியாது என்பது எமது கருத்தாகும். இவை தவிர "சிறுகதைகள்" பற்றிய ஆய்வும் குறிப்பிடக்கூடியவை.

இதுவரை நடைபெற்று வந்த ஒவ்வொரு இலக்கியச்சந்திப்பும் ஏதோ ஒருவகையில் வளர்ச்சியடைந்து வருந்தன்மையை ஒவ்வொரு சந்திப்பிலிருந்தும் உணரக்கூடியதாகவுள்ளது. இதை மேலும் செழுமைப்படுத்தி வளர்த்தெடுக்கவேண்டிய கடமையும் பொறுப்பும் ஒவ் முற்போக்கு சிந்தனையாளருக்கும் உண்டு என்பதுடன் அந்த வரலாற்றுக் கடமையிலிருந்து நழுவமுடியாது என்பதும் எமது கருத்தாகும்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# பெண்ணடிமைத்தனத்தின் ஆரம்பவரலாறு

இந்து நாகரீகத்திற்கும் எமது நாகரீகத்திற்கும் வரலாற்று ரீதியான தொடர்புகள் இருப்பதால் எமது பெண்ணடிமைத்தனத்தை ஆராயமுன் அதன் தோற்றுவாய்களையும் இந்திய சமுதாய அமைப்பையும் ஆராயவேண்டியது அவசியம்.

பழையகற்கால மனிதன் அநாகரீகத்தன்மையிலிருந்த போது உயிர்வாழ்வதற்கு உணவுதேடி அலைந்தான். இக்காலத்தில் ஆண்களின் பாத்திரம் சமுதாயத்தில் பிரதானமாக இருந்தது என்பது வரலாற்று ஆசிரியர்களின் கருத்து. இதைத் தொடர்ந்து வந்த புதிய கற்கால நாகரீகத்தில் நிலத்தில் சாகுபடி செய்யும் உணவு உற்பத்தி முறையை முதன்முதல் இந்தியாவில் கண்டுபிடித்தார்கள். இச்சாகுபடிகளை முதலில் நடத்தியவர்கள் பெண்களே. இவர்களால்தான் இப்புதிய கற்காலம் தோற்றுவிக்கப்பட்டதென்பது சரித்திர ஆராய்ச்சியாளரின் கூற்று. பழைய சமுகத்தில் ஆண்கள் முதலிடம் பெற்றது போன்று புதியகற்கால நாகரீகத்தில் பெண்கள் முதலிடம் பெற்றுள்ளனர்.

---

1 23.9.89ல் பிராங்பேர்ட்டில் நடைபெற்ற ஐந்தாவது இலக்கியச்சந்திப்பில் ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட 'பெண்ணடிமைத்தனத்தின் ஆரம்பம்'என்னும் பகுதியில் "வெகுஜனம்" சார்பில் வாசிக்கப்பட்ட கட்டுரை இது. இக்கட்டுரையிலுள்ள சரித்திரச்சானறுகளுக்கான ஆதாரங்கள் எம்.வி.சுந்தரம் எழுதிய

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இதைத் தொடர்ந்து வளர்ந்த உலோக காலத்தில் நகர்ப்புற நாகரீகம் வளர்ந்தது. இந்த நகர்ப்புற நாகரீகத்தின் வளர்ச்சிதான் "ஹரப்பா","மொகன்சதாரோ" போன்ற சிந்து வெளிநாகரீகங்களாகும். இந்த நாகரீகத்தில் பெண்களே சமுதாயத்தில் முதலிடம் பெற்றனர். இக் காலத்தில் பெண்களைப் போற்றும் வழிபாட்டு முறைகள் இருந்தன. ஆனல் மதம் அங்கே இடம்பிடிக்கவில்லை. இதே சமகாலத்தில் ஆபிரிக்கா, எகிப்து, கிரேக்கம் ஆகியநாடுகளிலும் பெண்ணை வழிபடும் முறை இருந்ததாக வரலாறுகள் சான்று பகர்கின்றன. இக்காலம் கி.மு 3500 - 2350 எனவும் கூறப்படுகின்றது. இந்த வழிபாட்டுமுறை அவர்களின் உழைப்பிற்கும் உயிர்களைப்பிரசவித்து வாழவைப்பது போன்று உயிர்வாழ்வதற்கான சாகுபடிகளைப் பெருக்கி சாதனை செய்தமைகளுக்காகவே போற்றப்பட்டன.

இந்தியாவில் மனித உரிமை என்ற கருத்து உழைப்பை ஆதாரமாகக் கொண்ட தாய்வழி உரிமை என்ற கருத்தின் வடிவமாக சிந்துவெளி நாகரீகமக்கள் பெண்களைப் போற்றினுர்கள். அந்த நாகரீகத்திலிருந்து தோன்றிய தாய்வழி உரிமை வளர்ச்சியடைந்தது. இந்த நிலை கி.மு. 1500ம் ஆண்டில் முற்றிலும் மாறுபடுகின்றது. இதை வேதகாலமென்பர். இருக்கு, யசுர், சாமம், அதர்வனம் என்ற நான்கு வேதங்கள் தோன்றின.

சிந்துவெளி மக்களின் சிந்தனையின் செயல்வடிவமான உழைப்பவர்களினைப்போற்றும் சமுதாயக் கருவூலம், உழைப்பவர்கள் என்பதால் மதிக்கப்பட்ட பெண்கள், அதன் வழிவந்த தாய்வழி உரிமை என்பன அழிக்கப்பட்டு பெண்ணடிமைத்தனம் புகுத்தப்பட்டது.மதத்தினுல் ஆணுதிக்கம் வலுப்படுத்தப்பட்டு தனியுடமைச் சமுதாய அமைப்பு பாதுகாக்கப்பட்டு வளர்க்கப்பட்டது.பிராமணன்,சக்கிலியன்,சூத்திரன்,அடி

www.tamilarangam.net

மை போன்ற பிரிவுகள் தோற்றம் பெற்றன.வேதக்கருத்துக்கள் பரப்பப்பட்டு உழைக்கும் மக்கள் பிறப்பால் அடிமை என்ற முறை புகுத்தப்படுகின்றது.சிந்துவெளி நாகரிகத்தில் உழைப்பால் சமுதாயத்தில் உயர்ந்த பெண் நிலையும் தாய்வழி உரிமையும் அகற்றப்பட்டு பெண்ணை அடிமைப்படுத்தும் கருத்துக்கள் வளர்க்கப்பட்டன.

இருக்கு வேதத்தில் 10552 செய்யுள் வரிகளில் 25 வரிகளில் மட்டுமே விவசாயம் பற்றிய கருத்துக்கள் குறிப்பிடப்படுன்றன.சிந்துவெளி நாகரிகத்தில் பெண்கள் மேற்கொண்ட நிலச்சாகுபடி குறைக்ககப்படுகின்றது.ஆனால் இருக்குவேதத்தில் ஆடு மேய்க்கும் மேய்ச்சல் பொருளாதாரம் ஆண்களை மிகவும் உயர்த்தி முக்கியப்படுத்திக்காட்டுகின்றது. இந்திரன், வர்ணன், மித்திரன் போன்ற தேவர்களின் மகத்துவம் உயர்த்தப்படுகிறது. உழைப்பிற்கும், இனப்பெருக்கிற்கும் காரணமாக இருப்பவள் பெண் என்பதற்குப் பதிலாக உண்மைக்குப் புறம்பான ஆண் சிருஷ்டியாளர்கள்(male creater) கற்பனைக் கடவுள்களாக்கப்படுகிறார்கள். பிராமண இலக்கியத்தில் பிராஜாபதி (தட்சா) எனப்படும் ஆண் சிருஷ்டியாளர் கற்பனைக் கடவுளாக்கப்பட்டுள்ளார்கள். இருக்கு வேதத்தில் உஷை என்னும் பெண் தேவதைபற்றிக் கூறப்படுகிறது.இத் தேவப்பெண் தேவர்களுடன் சோமபானம் அருந்த தடை விதிக்கப்பட்டுள்ளது. இவள் தேவர்கள் வேண்டும் போது நடமாடும் அடிமையாகச் சித்தரிக்கப்பட்டுள்ளதோடு இந்திரனின் காமஇச்சைக்குப் பலமுறை பலியாக்கப்பட்டுள்ளாதாயும் குறிப்பிடப்பட்டுள்ளது. இவ்வாறு வேதங்கள் மூலமாக இந்து மதம் பெண்களை இழிவுபடுத்தியுள்ளது.

பெண்கள் உழைப்பாளிகள், உற்பத்தியாளர்கள், போற்றுதலுக்குரியவர்கள் என்னும் சிந்துவெளி நாகரீகத்தின் சிறந்த சமுதாயக் கருத்தை இல்லாது அழித்து ஆணுக்குப் பெண் அடிமை, ஆணின் இச்சை

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தீர்க்கும் போகப் பொருள், பாலியலின் அழகு சாதனம் என்ற பெண்ணடிமைக் கருத்து சமுதாயக் கருத்தாக வேதகாலத்தில் செயல் வடிவம் பெற்று இன்றுவரை வளர்ந்திருக்கிறது. பெண்ணின் திருமணம் சம்பந்தமாக விதிக்கப்பட்டிருந்த அதீத கட்டுப்பாடுகள் கண்டிப்பாக அமுல்நடத்தப்பட்டன. பால்யதிருமணம், உடன்கட்டை ஏறுதல், கணவன் இறந்தால் மொட்டைஅடித்தல், வெண்ணிறஆடை உடுத்தல், வெளியே வராது தடுத்தல் போன்ற கொடுமைகள் வேதங்களினால் அறிமுகப்படுத்தப்பட்டவை. இவை மதஅதிபதிகளாலும், மனுசாஸ்திரதர்மங்களாலும், மடாலயங்களினாலும் இன்றும் பேணிப் பாதுகாக்கப்படுகின்றன. இதனால்தான் பெண்ணடிமைத்தனம் நம் சமுதாயத்திலிருந்து விலக்கப்படமுடியாது இருக்கிறது. சமய, ஆச்சார, கலாச்சார பண்பாடு நெறிகளாக இவை தமிழ் சமுகத்தினதும், இந்திய சமுகத்தினதும் மூச்சுக் காற்றில் கலந்து விட்டன.

உழைக்கும் வர்க்கத்தை உறிஞ்சும் மதமும், மதத்தைப் பாதுகாத்த வேதங்களும், உபநிடதங்களும், புராணங்களும், இதிகாசங்களும் இவைகளைப் புகழ்ந்து போற்றி வளரும் தனிஉடமைச் சமுதாய அமைப்பும், மனுதர்மசாஸ்திரங்களும் அச்சாஸ்திரங்களுக்கு விளக்கம் கொடுக்கும் சங்கராச்சாரிகளும், பூரிசங்கரும், சர்மாக்களும், தாங்களும் தங்களைச் சார்ந்தவர்களும் சுகமே வாழ என்றும் தனியுடமைச் சமுதாய அமைப்பை மாற்ற விரும்பார்கள். இத்தனை பெரிய இரும்புத்திரைகளினால் பாதுகாக்கப்பட்டு உழைக்கும் வர்க்கத்தின் உதிரத்தில் வாழும் இந்தத் தனியுடமைச் சமுதாயம் உடைக்கப்படும் போதுதான் உழைக்கும் வர்க்கம் உயர்வு பெறும். அந்த உழைக்கும் வர்க்கத்தின் ஒருங்கிணைந்த பேதமற்ற உறுதியான அமைப்பின் வழிநடத்தலில் முன்னெடுக்கப்படும் ஆண் பெண் இணைந்த போராட்டமே இதை நிலை நாட்டும். இது

www.tamilarangam.net

நிலைநாட்டப்பட வேண்டுமென்பதில் உண்மை விருப்பமிருந்தால் இந்த நோக்கின் இலக்கை அடையும் வழி வகைகளையே எமது பேனாக்கள் எழுதவேண்டும். மதத்தின் வேரான வேதமும் அதன் விழுதுகளும் சாகாமல் ஆண் பெண் பேதம் போகாது. ஆகவே அதைச்சாகடிக்க அதன் முக்கிய போதனைகள், வழிமுறைகள், நடைமுறைகள் அத்தனையையும் இதயசுத்தியுடன் எழுத்தாளர்களின் பேனாக்கள் சாடவேண்டும்.


## அன்பான வாசகர்களே!

தங்கள் ஆக்கங்களையும் விமர்சனங்களையும் வெகுஜனம் பெரிதும் வரவேற்கிறது. ஆக்கங்களை செழுமையாக்கவும் திருத்தவும் ஆசிரியர் குழுவுக்கு உரிமையுண்டு என்பதைத் தோழமையுடன் தெரிவித்துக்கொள்ளுகிறோம்.

சந்தாவிபரம்

6 மாதங்களுக்கு..........10,00 DM

1 வருடத்திற்கு..........20,00 DM

மேற்கு ஜேர்மனி தவிர்ந்த மற்றைய நாடுகளுக்கு தபாற்செலவு தனி.

தொடர்புகொள்ள வேண்டிய முகவரி:

VEKUJANAM
Mittwegstr. 21
4300 ESSEN 1
WEST GERMANY


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# உங்கள் பக்கம் உங்கள் ப

தங்கள் "வெகுஜனம்" குரல்-4, 89 இதழில் வெளிவந்துள்ள "எமது எண்ணங்கள்" பகுதியில் வடகிழக்கு பாதுகாப்பு பொறுப்பு மாகாணசபையிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது என எழுதியுள்ளீர்கள். ஆனால் இறுதியில் அரசு மீண்டும் தமிழ் மக்களை ஏமாற்றிவிட்டு இலங்கை இராணுவத்தை அனுப்பியுள்ளது. பேரினவாதிகளிடமிருந்து எந்த உரிமையையும் கேட்டு வாங்கமுடியாது அடித்துத்தான் பெறவேண்டும் என்பதை இலங்கை அரசு மீண்டுமொருமுறை எமக்கு ஞாபகப்படுத்தியுள்ளது. தமிழ் மக்களின் பாதுகாப்பு மாகாணசபையிடம் ஒப்படைக்கப்படவேண்டும் என்ற முதல்வரின் ஜனநாயகப்போராட்டத்தை வரவேற்றுள்ள தங்கள் கருத்து சரியானதாயினும் இதை இலங்கை அரசு கொடுக்குமா என்பது சந்தேகமே எனக்குறிப்பிட்டிருப்பின் தங்கள் கருத்து மேலும் வலுப்பெற்றிருக்குமென்றே கருதுகிறேன். மலையகக் குடியேற்றம்பற்றிய குறிஞ்சிப்பரல் கட்டுரையை பதுளை கோவலன் எழுதி மலையகப்பிரச்சனைகளில் சிலவற்றை "வெகுஜனம்" மூலம் அம்பலப்படுத்தியுள்ளமை பாராட்டுதலுக்குரியது ஆனால் இக்கட்டுரையை எத்தனைபேர் வாசித்திருப்பார்களோ. மலையக மக்களைப்பற்றி சிந்திப்பார்களோ என எண்ணும்போது வேதனையாக உள்ளது. "கழகம் வந்த பாதை" என்னும் கட்டுரையை எழுதியுள்ள கண்ணன் கழகம் பற்றி சொல்ல வந்து எல்லா இயக்கங்களையும் திட்டித்தீர்த்துள்ளார். ஆனால் கழகமோ களத்தில் ஏனைய இயக்கங்களுடன் தேசியசபையில் சேர்ந்துள்ளது. இவர்களைப் போன்றவர்களால்தான் இயக்கஒற்றுமைகள் கூறுபோடப்படுகின்றன. இனிமேலாவது இவர்கள் போன்றவர்கள் நடந்தவைகளை மறந்து கழகம் பற்றி மார்தட்டாது ஐக்கியத்தை வலியுறுத்த முன்வரவேண்டும்.

நா-பத்மநாதன்
ரொறன்ரோ

ஜனம்-2, குரல்-4 வெளியீட்டில் கௌதமன் எழுதிய "தீர்ப்பு-மரணதண்டனை" என்னும் சிறுகதையில் அவர் அமைத்துள்ள ஜோசி என்னும் பாத்திரம் என்னுள் பெரும் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது. யதார்த்த பூலத்திலிருக்கும் ஒரு சூழ்நிலையை அப்படியே வெளிக்கொணர்ந்துள்ளார். ஆனால் தங்கள் கையெழுத்துப்பிரதி வாசிப்பதற்கு பகீரதப் பிரயத்தனப்படவேண்டியுள்ளது.

[illegible]

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அன்புடன் ஆசிரியர் குழுவுக்கு.

"கழகம் தந்த பாடம்" என்ற எனது கட்டுரையை விமர்சிக்கும் வகையில் "கழகம் வந்த பாதை" என்னும் கட்டுரையை கர்ணன் என்ற தோழர் ஒருவர் எழுதியிருந்தார். இதற்கான பதிலை கூறவேண்டியவன் என்கின்ற முறையில் எனது சில கருத்துக்களை தெரிவிக்க விரும்புகின்றேன்.

நான் கடந்த காலத்தில் கழகத்தினுடைய கருத்துக்களில் அதீத நம்பிக்கை கொண்டிருந்ததுடன் வளர்ச்சிக்கான ஆதரவு சக்தியாகவும் செயற்பட்டு வந்தவன் என்பது இங்கு கவனிக்கப்படவேண்டிய முக்கியவிடயமாகும். என்னை ஒரு செந்தோழன் என்ற தவறான கணிப்புடனும் பிற அமைப்புக்களை கழகத்துடன் ஒப்புநோக்கி கழகத்தினுடைய தவறுகளை மறைக்க முற்பட்டிருக்கின்றார்.

கழகத்திலிருந்து வெளியேறிய தீப்பொறிக் குழு தோழர்கள் வெளியிட்ட பிரசுரங்களையும், நாவலையும் (புதியதோர் உலகம்) ஆதாரமாக வைத்து இக்கட்டுரையை எழுதினேன். ஆனால் அக்கட்டுரையில் "சவுக்குத்தோப்பு", "பெரியவர்" போன்ற சொற்பதங்களுக்குப் பதிலாக "[illegible]த்தோப்பு", "பெரியவா" ஆகிய இரண்டு சொற்களை தவறுதலாக எழுதியதைத் தவிர வேறு எதையும் நான் மிகையாக எழுதிவிடவில்லை. "கழகம் தான் பிரசவித்த புரட்சிக் குழந்தைகளை பெருமளவு இழக்கவில்லை", "ஏகாதிபத்திய சக்திகளால் நசுக்கப்பட்டோம்" என்பதை இக்கட்டுரையில் கூறுவதின் மூலம் கழகத்தினுள் ஏற்பட்ட உட்கட்சிப்போராட்டங்களையும் அது அடக்கப்பட்ட விதங்களையும், இப்போராட்டங்களின்போது முகவரி தெரியாமல் போய்விட்ட தோழர்களையும் மறைக்க முற்பட்ட தன்மையை தோழரின் ஆய்வுகள் காட்டுவதுடன் தவறுகளை ஏற்றுக்கொள்ளும் பக்குவம் இல்லாததன்மையையும் தெளிவுபடுத்துகின்றது. "கழகமானது சாதி, மத, இன, பிரதேச வேறுபாடுகளுக்கு அப்பால் சகலதரப்பு மக்களையும் உள்ளடக்கியதாகவே வளர்ச்சியடைந்து வந்தது" என்று கூறும் தோழரே அப்படியாயின் "பெரியவா" என்னும் பதம் எந்த சித்தாந்தத்தின் அடிப்படையில் கழகத்தினுள் உருவாக்கப்பட்டது?

ஆகவே தோழரே எனது கட்டுரையில் தவறுகளைக்காண்பதைவிட கழகத்தின் கடந்த காலத்தவறுகளை சுயவிமர்சனம், விமர்சனம், ஜனநாயகமத்தியத்துவம் என்னும் அடிப்படையில் கழகத்தினுடைய தவறுகளை சீர்செய்யப்பார்ப்பீர்களாயின் அதுவே கழகத்தினுடைய எதிர்கால வளர்ச்சிக்கு படிக்கற்களாக அமையும் என்பதுடன் எமது மக்களின் விடுதலைக்கும் உதவும் என்பது எனது கருத்தாகும.

எனது கட்டுரையின் நோக்கத்தை புரிந்து [illegible]

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# சங்கரப்பிள்ளையின் சிந்தி அரசியல்-ஆ

பிள்ளையர் பிள்ளையர் என்று கூப்பிட்டுக்கொண்டு வாத்தியார் சங்கரப்பிள்ளையரின் படலையைத்திறந்து கொண்டு வீட்டுக்குள் புகுந்தார். பிள்ளையர் வாத்தியார் வந்ததையும் கவனிக்காமல் சீனிமூடை ஒன்றை பெரும் வில்லங்கப்பட்டு இழுத்துக் கொண்டிருந்தார். வீட்டு விறாந்தைகளில் சீனி, மா, அரிசிமூடைகள் அங்குமிங்குமாகக்கிடந்தன. வாத்தியாருக்கு ஒன்றுமே விளங்கவில்லை.

என்ன பிள்ளையர் கடையை வீட்டுக்கு மாத்திப்போட்டீரோ

சத்தம் கேட்டு நிமிர்ந்து பார்த்த பிள்ளையர் வாத்தியாரைக்கண்டதும் சீனிமூடையை அப்படியே போட்டு விட்டுவந்தார்.

என்ன வாத்தியார் இந்தப்பக்கம். இருங்கோ வாத்தியார் கதிரை ஒன்டுஎடுத்துக்கொண்டு வாறன்.

இல்லைப்பிள்ளையர் இந்தச்சாக்கு மூடைக்கு மேல இருக்கலாம் கதிரை வேண்டாம் இஞ்சைவாரும். அதுசரி உதென்ன எல்லாம் மூடையளாய் கிடக்குது என்னவிசயம்.

சங்கரப்பிள்ளையர் மெல்லியசிரிப்புடன்.

அது வாத்தியார்--------வந்து --------பிரச்சனை பெரிசாகும் போலைகிடக்கு பொடியள் பிறகும் பெரிசா அடிபடப்போகுங்கள் எண்டு சனம் குசுகுசுக்குதுகள். அதுதான் கொஞ்சச்சாமான் சேர்த்துவைக்கிறன். இப்பிடியான நேரங்களிலை நாங்கள் சனங்கள் பட்டினியாலை சாகாமல் உதவி செய்யிறதோடை நாங்களும் நாலு காசு சம்பாதிக்கலாம் வாத்தியார்.

பிள்ளையரின் சிந்தனைகளை நினைக்கும் போது வாத்தியாருக்கு அருவருப்பாக இருந்தது. பிள்ளையர் எரியிறவீட்டிலை பிடுங்கினது லாபம் என்கிற கூட்டம் நீங்கள். உங்களுக்கெல்லாம் லைட்போஸ்ட்தான் சரிகாணும். இப்பநீர் சொல்லுகிற பிரச்சனையை வளர்த்து விட்டதும் நீங்கள்தான். இப்ப என்னடாவெண்டால்எல்லா இயக்கங்களும் சரியில்லை என்டு சப்பைகொட்டுறியள்.

அது கிடக்கட்டும் வாத்தியார் இப்பிடியே இயக்கங்கள் அடிபட்டு என்ன செய்யப்போகினமாம். வீணாய் எங்கட பொடியள் சாகிறதுதான் மிச்சம்.

அது கிடக்கட்டும் பிள்ளையர் நீங்கள் உப்பிடியே வெளியே நின்டுகொண்டு பிறத்தியாட்கள் மாதிரி நீலிக்கண்ணீர் வடிச்சு என்ன செய்யபோறியள். பணம் போட்டமாதிரி அள்ளிஇறைச்சு வளர்த்து விட்டிட்டு இப்ப நியாயத்தை சொல்ல திராணியில்லாமல் கருத்துச் சொன்னால் மற்ற

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இயக்கத்தாலை ஆபத்தெண்டு வாய்மூடி மௌனியாகிவிட்டியள். ஆனால் ஒண்டு மட்டும் உண்மை நீங்கள் வாய்திறந்து நியாயத்தின் பக்கம் குரல் கொடுக்காதவரை பிரச்சனை வளருமேதவிர குறையவேகுறையாது. அதுசரி வெளிநாட்டிலுள்ள சனம் இஞ்சை பிரச்சனை இருந்தால்தான் தாங்கள் அங்கை இருக்கலாம் எண்டு நினைச்சு பிரச்சனைகளை உருவாக்குறவைக்கு காசு அள்ளிக்கொடுக்கிறமாதிரி உங்களுக்கும் பிரச்சனை இருந்தால்தான் ஒற்றைக்கு இரட்டைக்காசுக்கு சாமான்களை விற்பியள். நீங்கள் எல்லாரும் விடுதலை, சுதந்திரம் எண்டெல்லாம் சொல்லுறதுக்கு முன்பு வாய் கொப்பளிச்சு போட்டுசொல்லுங்கோ.

வாத்தியார் சொன்னவற்றைகேட்டு பிள்ளையர் திரு திருவென முழித்தார். மெதுவாகக்கதையை மாத்தினர்.

வாத்தியார் ஊரிலை வேற என்ன புதினங்கள் அதைச்சொல்லுங்கோ

பெரிதாக ஒண்டுமில்லை பிள்ளையபடி அறவார் இலங்கை ஆமிபிறகும் அடிக்கத் தொடங்கிவிட்டாங்கள் வளவங்கள் சனங்களுக்கு திரும்பவும் 83தான்.

அப்படியா வாத்தியார் எனக்கொண்டும் தெரியாது ஒருத்தரும் கதைக்கயில்லை. றேடியோ செய்தியிலும் சொல்லயில்லை இலங்கைஆமி எங்கையாம் அடிக்குதாம்.

அதுசரி பிள்ளையர் உங்கடைவீட்டை வந்து ஆமிஅடிக்கும் வரைக்கும் உங்களுக்கு ஒண்டுமதெரியாது. அம்பாறை மட்டக்களப்பிலை எத்தனை ஆயிரம்சனம் ஆமிபொம்பர் அடிச்சதிலை அகதிகளாய்ப் போச்சுதுகள்.

எடகிழக்கிலையா பிரச்சனை நானும் இஞ்சை எல்லே பிரசசனை எண்டு பயந்து போனன்.

பிள்ளையரின் கதையைக் கேட்ட வாத்தியாருக்கு கோபம் கோபமா ய் வந்தது.

கிழக்கிலை சனம் அகதிகளாய்போச்சுதெண்டால் உங்களுக்கு இளக்காரமாய் போச்சுது . உங்களுக்கும பொம்பர்அடிக்க கனநாள் எடுக்காது.

என் வாத்தியார் வடக்கு கிழக்கு எண்டு பிரிச்சுப்பாக்கிறியள்.

நீங்கள் மனதுக்குளை பிரிக்கிறதை நாங்கள் வெளிப்படையாய் சொல்லுறம். எல்லாரையும் மனுசரெண்டு எப்ப மதிக்கிறியளோ அண்டைக்குத்தான் எங்களுக்கு விடிவு. வாயாலை தமிழீழம் எண்டு சொல்லிப்போட்டு நடைமுறையிலை குடாநாட்டிலை குண்டுச்சட்டிக்குளை குதிரை ஓட்டுறது. நீங்கள் எப்ப திருந்தப்போறியளோ.

நீங்கள் சொல்லுறதைப்பார்த்தால் இலங்கைஆமி எல்லா இடமும் வரத்தான் போறுங்கள். இந்தப்போக்கறுவார் எப்பபோறது எப்

www.tamilarangam.net

பபிரச்சனை தீருறது.

வாத்தியார் பிள்ளையரின் கதையைக்கேட்டு வாய்விட்டு சிரித்தார்.
என்ன வாத்தியார் நான் சொன்னதிலை என்ன பிழை ஏன் சிரிக்கிறியள்.
இலைப்பிள்ளையர் கடந்தகாலத்தை கொஞ்சம் திரும்பிப்பாரும். தமிழ்
க்காங்கிரசை நம்பிக்காத்துக்கிடந்தியள், தமிழரசுக்கட்சி வர அதை
நம்பிக்காத்துக்கிடந்தியள், பிறகு கூட்டணியிடம் காத்துக்கிடந்தியள், இயக்
கங்கள் வந்தவுடனை பொடியள் அடிச்சுத்தருவாங்கள் எண்டு காத்துக்கி
டந்தியள், பொடியள் அடிபட்டுக்கொண்டபோது இந்தியன் ஆமிவராதா
எண்டு காத்துக்கிடந்தியள். இந்தியன் ஆமியை உங்களுக்கு எதிராகத்திருப்
பிவிட்டவுடனை இந்தியன் ஆமிபோகாதா எண்டு காத்துக்கிடக்கிறியள் இ
ப்ப இலங்கை ஆமி திரும்ப வந்திருக்கு இது எப்பபோகும் எண்டு காத்
துக்கிடக்கப்போறியள். ஆக மொத்தத்திலை காத்துக்கிடக்கிறதுக்கு உல
கத்திலை ஒருத்தரும் உங்களை மிஞ்சஏலாது. இன்னும் கொஞ்ச நாளிலை
கின்னஸ் புத்தகத்திலை உங்கடைபெயர் வரப்போகுது. ஆனால் ஒண்டு விளங்
கிக் கொள்ளும் நீங்கள் இவ்வளவு நாளும் காத்துக்கொண்டும் பார்த்
துக்கொண்டும்இருந்திட்டியள் எப்ப நீங்கள் ரோட்டிலை இறங்குறியளோ
அண்டைக்குத்தான் எங்களுக்கு விடிவு. உந்தச்சீனியும் மாவும் அரிசியும் எ
ப்பவிலைப்படும் எண்டு காத்துக்கிடக்கும் நான் வாறன்.

வாத்தியார் நடையைக்கட்டினார்:
பிள்ளையர் இடிச்சபுளிமாதிரி முழுத்துக்கொண்டு நின்றார்.

---

Beratung und Betreuung
von Flüchtlingen

DEUTSCHE FLÜCHTLINGSHILFE
BONN E.V.

Colmantstr. 5, 5300 Bonn 1
☎ 0228/650993

DFH Bonn e.V. · Colmantstr. 5 · 5300 Bonn 1

மேற்கு ஜேர்மனியில் வாழும் சகல தமிழ் அகதிகளின் நலன் கருதி, ஜேர்மன் அகதிகள் உதவி நிறுவனம், பொன் நகரில் " தமிழ் அகதிகள், மனித உரிமை, சக, பொது நல " ஆலவலகம் ஒன்றினை, பொன் பிரதான புகையிரத நிலையத்திற்கும் காரள்லான்ட் பொருட்காட்சிச்சாலைக்கும் இடையிலுள்ள கொள்மான்ட் வீதி 5ம் இலக்கத்திலுள்ள கட்டடத்தில், அண்மையில் ஸ்தாபித்துள்ளனர்..

தமிழ் அகதிகட்கு கீழ்கண்ட ஆலோசனைகளும், நீண்ட கால கண்ணோட்டத்துடன் பயனுள்ள உதவிகள்.

0 உள மனோ ரீதியான நீண்டகால பராமரிப்பு.

0 தமிழ் அகதிகட்கு அவரவர் தகுதி திறமைக்கேற்ப வேலை வாய்ப்பு,

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தொழிற் கல்வி, தொழில் நுட்ப பயிற்சிகள் ஏற்பாடு.

0 ஜேர்மன் மொழி பயில ஒழுங்குகள்.

0 பல துறைகளை உள்ளடக்கிய ஒரு கொடுக்குதவும் தமிழ் நூலகம்.

0 தமிழ், ஆங்கில மொழியில் உள்ள சான்றிதழ்கள் ஜேர்மன் பாஷையில் மொழி பெயர்ப்புச் சேவை.

0 வீடுதேடுதல், மற்றும் அலுவலகங்களில் ஏற்படும் மொழி மற்றும் இன்ன பிற சிக்கல்கள். பிரச்சனைகளைத் தீர்த்துவைத்தல்.

0 ஜேர்மனியில் பல பாகங்களில் வாழும் நெருங்கிய உறவினர்களை, ஒரே நகரில் அல்லது மாகாணத்தில் வாழ ஏற்பாடு செய்தல்.

0 சொந்த நாட்டிலோ, அல்லது வேறு நாட்டிலோ விடுபட்டு வந்த உறவினர்களை

0 மூன்றாவது நாடுகட்குச் சட்டரீதியாக குடிபெயர ஏற்பாடு செய்தல்.

0 தாம் நாட்டிற்குச் சுய விருப்பத்தின் பேரில் திரும்பிச் செல்ல விரும்புவோருக்கு இலவச டிக்கட், பணஉதவி, தாம் நாட்டை அடைந்ததும், தம்மை திரும்பவும், பழைய நிலைக்குக் கொண்டுவர பலவிதமான புனருத்தாரன உதவிகளை, ஐ.நா. அகதிகள் நிறுவனத்தின் அனுசரணையுடன் ஏற்பாடு செய்தல்.

செய்தி, தகவல் சேவை.

0 பத்திரிகைச் செய்தி தொகுப்புகளின் ஆவணகாப்பு.

0 பத்திரிகைச் செய்தி தொகுப்பு வெளியீடு.

0 பத்திரிகைச் செய்தி சேகரிப்பு, பாதுகாப்பு, விநியோகம்.

0 கருத்தரங்கு, விவாதங்கள், வரிவுரைகள்.

0 கூட்டங்கள், மகாநாடுகள், ஆலோசனைக்குழுக்கள்.

0 ஜேர்மன் மக்கள் — தமிழ் அகதிகள் உறவுகள், தொடர்புகள் பலப்படுத்தல்.

அலுவலக நேரங்கள்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| திங்கள், செவ்வாய், வியாழன் | காலை | 11.00 | முதல் | 16.00 | வரை. |
| செவ்வாய் | மாலை | 18.00 | முதல் | 20.00 | வரை. |
| வெள்ளிக்கிழமை | காலை | 9.00 | முதல் | | |
| | | | பகல் | 12.00 | வரை. |

மேலதிக விபரங்களுக்கு! —

TAMIL REFUGEES HUMAN RIGHTS
& WELFARE COMMITTEE
C/o. D.F. HILFE BONN E.V.
COLMANT STR-5
5300 - BONN - 1
WEST GERMANY



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# தேர்தல் களம் இந்தியா



81 கோடிக்கு மேலான மக்கள் தொகையைக் கொண்ட இந்திய தேசத்தின் 9வது பாராளுமன்றத்தின் 524 இடங்களுக்கு 49 கோடியே 86இலட்சம் வாக்காளரின் வாக்குகளை வேட்டையாடும் தேர்தல் களத்தில் காங்கிரஸ், தேசிய முன்னணி, பாரதீய ஜனதா, இடது, வலது கம்யூனிஸ்டுகள், தேசிய ஒருமைப்பாட்டுக்கட்சி, ஆர்.எஸ்.பி. போன்றவற்றுடன் மாநிலக் கட்சிகளும், சுயேட்சைகளுமாக 6090 அபேட்சகர்கள் போட்டியில் குதித்தனர். கடந்த நவம்பர் மாதம் 22ம்-24ம்-26ம் திகதிகளில் வாக்குகள் பதிவாகி பின்னர் தேர்தல் முடிவுகள் அறிவிக்கப்பட்டன. அறிவிக்கப்பட்ட முடிவுகளின்படி எந்த ஒருகட்சியும் தனித்து அரசை அமைக்கும் அறுதிப்பெரும்பான்மையைப் பெற்றிருக்கவில்லை. 1984ம் ஆண்டுத் தேர்தலில் 400க்கும் மேற்பட்ட இடங்களைப் பெற்று ஆட்சியிலிருந்த காங்கிரஸும் பிரதமர் ராஜீவ் காந்தியும் (195) அதன் அரைவாசியைத்தானும் பெறமுடியவில்லை. இன்றைய பிரதமராக இருக்கும் வி.பி.சிங்கின் தேசிய முன்னணிக்கு 145 இடங்கள் மட்டுமே கிடைத்துள்ளன. ஒன்றுக்கொன்று எதிரும்புதிருமான ஆதரவுக் கட்சிகளுடன் வி.பி.சிங்கின் அரசாங்கம் ஆட்சி நடத்திக் கொண்டிருக்கிறது. இதற்கான காரணங்கள் என்ன? தலைமையா? ஊழலா?, மதமா? தேசிய ஒருமைப்பாடற்ற மாநில உணர்வா? சிறுபான்மையினரின் உரிமைகளுக்கு ஏற்பட்டுள்ள அச்சுறுத்தலா? என்பன நோக்கப்படவேண்டியவையே..





ஜனநாயகம் பேசப்படும் இந்தியாவின் பிரதமர் பதவியும், காங்கிரஸ் தலைமையும் நேரு பரம்பரைக்கு என்ன தனிச்சொத்தா(?)என்ற வார்த்தையால் வெளிவராத அழுக்கமான கேள்விகளைச் சுமந்த மக்களின் கீறல்கள் காங்கிரஸினதும் அதன் பிரதமரினதும் தோல்வியை நிர்ணயித்திருக்கலாம். பிரதமர் கட்சியின் தலைவர் என்ற மமதை எதேச்சதிகாரமாக பின்விளைவுகளை நோக்காத முடிவுகளை எடுத்ததையும் மந்திரிசபையின் பதவிமாற்றங்கள், நீக்கங்கள், வெளியேற்றங்கள் என்ற நடவடிக்கைகளாலான பிழையான அணுகுமுறைகளும், பாராளும

www.tamilarangam.net

...றத்தின் அதிகப் பெரும்பான்மைப் பலம் தன்பக்கமே இருக்கின்றது என்ற துணிவிலும் பத்திரிகைச் சுதந்திரத்துக்கு அச்சுறுத்தலான சட்டமூலங்களை கொண்டுவர முயன்றதும், அமிர்தாம்பசின், போபோர்ஸ் பீரங்கி ஊழல் போன்ற பிரச்சனைகள் பற்றிய கணக்குகளைத் தடைக்க விசாரணையோ அன்றி வேறு நடவடிக்கைகளையோ எடுக்காது விட்டதும், மத தீவிரவாதத்திற்கெதிரான நடவடிக்கைகளை உரியகாலத்தில் எடுக்காததும், தாமதித்து எடுத்ததினால் ஏற்பட்ட விரோதமும், வறுமைக்கோட்டு [illegible] வாழ் நிலைக்குக் கீழ் இருக்கின்ற இந்திய சனத்தொகையின் பெரும்பகுதி மக்கள் கவனிக்கப்படாமையையும் வி. பி. சிங்கின் எழுச்சி அலையுடன் உதயமான தேசிய முன்னணியையும் காங்கிரஸினதும், தலைமையினதும் வீழ்ச்சிக்குக் காரணங்களாகக் கூறினாலும், காங்கிரஸ் ஆட்சியில் செய்யப்பட்ட நல்ல செயல்களான மதசார்பற்ற தேசிய மனப்பாங்கான கொள்கையும் அதன் வெளிநாட்டு, உள்நாட்டுக் கொள்கைக்கும் ஆதரவு கிடைத்துள்ளன என்பதை தேர்தல் முடிவுகள் காட்டுகின்றன. இந்தியாவின் தென் பகுதி மாநிலங்களில் காங்கிரஸ் தனது கால்களை இன்னும் பலமாக ஊன்றிக் கொண்டுள்ளது. இங்கே மதப் பிரச்சாரம் வலுவிழந்து விட்டுள்ளது. மாறாக வடக்கே பாரதீய ஜனதா கட்சியினால் மதத்தீவிரவாதம் வளர்க்கப்பட்டது. அவர்கள் தங்களின் ஆட்சி ஏற்படும் பட்சத்தில் சிறுபான்மை மதத்தினரின் சலுகைகளை நீக்கி இந்து மதத்தையே இந்தியாவின் அரசமதமாக்குவோம் என்று பிரச்சாரம் செய்தனர். அத்துடன் நிற்காது நவம்பர் 9ம் திகதி அயோத்தியில் இராமர் கோவில் கட்டுவதற்கு அடிக்கல் நாட்டினார்கள். இக்கோவிலைக் கட்டி முடிக்க இந்தியா முழுவதிலும் உள்ள இந்துக்களிடமிருந்து நிதியும், கற்களும் சேர்த்தார்கள். இவர்கள் இராமர் கோவில் கட்டுவதற்கு அடிக்கல் நாட்டியுள்ள இடத்தருகே 13ம் நூற்றாண்டில் கட்டப்பட்ட மசூதி ஒன்று இருக்கிறது. அனேகமாக இது முஸ்லீம்களுக்கும் வரலாற்றுமுக்கியமிக்க வழிபாட்டு தலமாகும். இதனையும் இடிக்கப்போவதாக அச்சுறுத்தல்கள் ஏற்படுத்தினார்கள். இதனால் முஸ்லீம்கள் வெகுண்டெழுந்தனர். மதக்கலவரத்தின் தோற்றுவாய் விகற்பம் பெருமல் சட்டநடவடிக்கைகளாலும், பாதுகாப்புக்களாலும் தடுக்கப்பட்டாலும் கோவில் தோற்றம் பெற்றதால் முஸ்லீம்களின் ஆதரவும், தோற்றம் பெற்ற கோவிலுக்கான தடைநடவடிக்கைகளாலும் இந்துக்களின் எதிர்ப்பையும் ஆட்சியிலிருந்த காங்கிரஸ் சம்பாதித்துக் கொண்டது. இதனால் வடக்கே மதம் வெற்றி கொண்டது.





அதேவேளை தெற்கே தேசியம் நிலைநா...

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஒன்றுக்கப்பட்டு அதன் தாக்கங்களிலிருந்து விலகிக்கொள்ள முடியாத ஈழத் தமிழர் பிரச்சனையில் கொந்தளிக்கும் தென் மாநிலங்களின் நிலையை தங்களுக்குச் சார்பாக வைத்து அரசியல் இலாபம் தேடிய மாநிலக் கட்சிகளான தி.மு.க போன்றவையும் அதன் தாசர்களும் இத்தேர்தலில் அம்பலப்படுத்தப்பட்டுள்ளார்கள். ஈழத்தமிழர் பிரச்சனையைத் தமிழ் நாட்டில் பூதாகாரப்படுத்தி புலிவடிவம் கொடுத்த வை. கோபாலசாமியும், தி.மு.கழகமும் தோல்வியைத் தழுவியுள்ளனர்.



24000 வாக்குகளால் அ.தி.மு.க காளிமுத்துவிடம் தோல்வியடைந்த கோபாலசாமியின் இலங்கை விஜயம் தேர்தலுக்கான பிரச்சாரமாகப் பாவிக்கப்பட்டபோதும் தி.மு.கவின் அரசியல் வரலாற்றில் இம்முறைதான் ஒரு இடத்தைத் தானும் பிடிக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. அத்துடன் இக்கட்சி தேசிய முன்னணியின் ஓர் அங்கம் என்பதும் மறுக்க முடியாத உண்மையாகும். இதேவேளை தமிழ்நாட்டில் காங்கிரஸ் 26 இடங்களைப் பெற்றுள்ளதுடன் தோழமைக் கட்சியான அ.தி.மு.க 11 இடங்களையும் இந்தியப் பொதுவுடமைக்கட்சி ஒரு இடத்தையும் கைப்பற்றிக் கொண்டன.



கடந்த 10 வருடங்களாக ஜனதாவிடம் இருந்த கர்நாடக மாநிலத்தை காங்கிரஸ் திரும்பப் பெற்று, தெலுங்கு தேசம் கட்சியிடமிருந்து அதன் மாநிலத்தை வெற்றி கொண்டதோடு கேரளத்திலும் தனது நிலையை இழக்காது காப்பாற்றிக்கொண்டது. தெலுங்கு தேசம் கட்சியின் தலைவர் என்.ரி.ராமராவ் தான் தேசிய முன்னணியின் தலைவருமாவார். தேசிய முன்னணியின் இரு அங்கங்களான தி.மு.கவையும், தெலுங்கு தேசம் கட்சியையும் ஜனதாவின் கர்நாடக மாநிலத்தையும் தோற்கடித்தமையில் மாநில உணர்வுகள் மழுங்கடிக்கப்பட்ட தேசிய உணர்வு தென் மாநிலங்களில் வளர்ந்துள்ளதை தேர்தல் முடிவுகள் காட்டுகின்றன. அத்துடன் காங்கிரஸின் இலங்கைப்பிரச்சனை தொடர்பான அணுகுமுறையை மக்கள் வரவேற்றுள்ளார்கள் என்பதையும் இங்கு நாம் கணக்கிலெடுக்காது இருக்கமுடியாது.

தோல்வியுற்றும் காங்கிரஸ் முன்னணிக் கட்சியாக முதல் இடம் வகிப்பதற்கு இந்தியாவின் வளர்ச்சியில் காட்டப்பட்ட ஆர்வங்களேயாகும். விஞ்ஞான தொழில் நுட்ப வளர்ச்சியில் காட்டப்பட்ட அக்கறையும், தொழிற்றுறை அபிவிருத்திகளும், இந்தியாவிற்கென்ற தனித்துவமான உற்பத்திக் கொள்கைகளையும் கடைப்பிடித்தமையும், வெளிநாட்டுக் கொள்கையில் அணிசேராக் கொள்கையின் அங்கமாக அன்றிலிருந்து இன்றுவரை செயற்பட்டு வந்தமையும், பிராந்திய நலன்கள், இந்து சமுத்திர அமைதி வலயம், அண்டை நாடுகளான பாகிஸ்தான், சீன போன்றவற்றுடன் உறவுகளைப்புதுப்பித்தமை

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இந்திய இலங்கை ஒப்பந்தங்களில் ஏற்பட்ட புது உறவுகள் காங்கிரஸையும் அதன் தலைமையையும் ஓரளவுக்கு பாதுகாத்துள்ள முக்கிய காரணிகள் எனலாம்.

இந்தியாவில் இன்றைய பிரதமராகப் பதவிப்பிரமாணம் பெற்று அரசாங்கத்தை அமைத்திருக்கும் திரு வி. பி. சிங் மகாராஜ பரம்பரையைச் சேர்ந்தவர். இந்திரா காந்தியின் காலத்தில் காங்கிரஸின் மந்திரிசபையின் உறுப்பினராக இருந்தவர். முன்னைய அரசாங்கத்திலும் நிதி, பாதுகாப்பு போன்ற அமைச்சுக்களிலிருந்து அனுபவம் பெற்றவர். ஊழல்கள் நிறைந்த காங்கிரஸ் அரசை விரட்டி ஊழலற்ற அரசை நிறுவ வேண்டும் என்ற நோக்கோடு தேசிய முன்னணியைப் பல ஆண்டுகளுக்கு முன்பே உருவாக்கியதும் தேசம் முழுவதும் பிரசாரத்தில் ஈடுபட்டதும் இந்திய அரசியல் வானில் ஜோதியாகத் திகழவைத்துள்ளது. நேரு பரம்பரையை இரண்டாவது தடவையாக எதிர்க் கட்சி வரிசையில் அமரச் செய்த நிகழ்வின் கதாநாயகன். இன்று பாதுகாப்பு, அணுசக்தி, விண்வெளி தொழில்நுட்பம், ஆள், ஒய்வூதியம், பொதுமக்கள் குறைகேள் அமைச்சு என்பன வற்றுடன் இன்னும் ஒப்படைக்கப்படாத அமைச்சுக்களையும் தானே ஏற்றுள்ளார். இது அவரின் தனித்திறமைக்கு ஓர் எடுத்துக்காட்டாகும்.





தேர்தலைக் களத்தில் வி. பி. சிங்கின் கட்சியும் சேர்ந்தே ஜனதா தளம் என்ற பெயருடன் மற்றைய கட்சிகளான தேசிய முன்னணியின் தலைவரான என். டி. ராமராவின் தெலுங்கு தேசமும், தி. மு. கழகமும் காங்கிரஸ் (எ)ம், அசாம் கணபரிஷத்தும் சேர்ந்தே முன்னணி அமைத்தன. ஆனால் ஜனதா தளத்தைத் தவிர மற்றைய கட்சிகள் தோல்வியைத் தழுவிக் கொண்டன.

இருந்த போதும் காங்கிரஸ் அரசாங்கத்தை விரட்ட வேண்டுமென்ற நோக்குடன் போட்டித்தவிர்ப்புகள் செய்து கொண்டமையால் பாரதீய ஜனதாவும், வலது, இடது கம்யூனிஸ்ட்டுக்களும், மற்றைய சிறு கட்சிகளும் வி. பி. சிங்கின் தேசிய முன்னணி அரசுக்கு ஆதரவு நல்குவதாக ஒப்புதல் அளித்துள்ளன. பல சிறுபான்மைக் கட்சிகளின் அங்கங்களாக இன்றைய அரசு அமைந்திருப்பதால் வி. பி. சிங்கிற்கு இது பெரும் தலையிடியையே கொடுக்கும்.

பாரதீய ஜனதா இந்து மதத் தீவிரவாதத்தை பரப்பியே வெற்றிவாகை சூடிக்கொண்டது. ஆனால் இதற்கு எதிராக வலது, இடது என்று தங்களையே பெயர் சூட்டிக்கொண்ட கம்யூனிஸ்ட்டுகள் இவர்களின் கொள்கைக்கு எப்படி உடன்பட்டுப் போகின்றனர். வி. பி. சிங்கின் அர

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

மல் தடுக்க இவர்கள் இச்சிறுபான்மை அரசுக்கு உதவினாலும் தங்களின் கொள்கைக்கு மாறானதையே "பேச்சும் பல்லக்கு தம்பி கால்நடையெனச் செய்கிறார்கள். தேர்தலில் மக்களுக்கு கொடுத்த வாக்குறுதிகள் தேர்தல் விஞ்ஞாபனத்தில் கூறியவைகள் போம் எங்கு ஏற்று சொல்லுக்கும் செயலுக்கும் காத வழியென்பதை நிரூபிக்கப் போகிறார்களா? இவர்களின் கொள்கைத் திட்டம் இன்மையால் தான் தேசியம், பொதுவுடமை பற்றிப் பேசியபோதும் இந்திய மக்களின் ஆதரவைப் பெற்று அரசமைக்க முடியாது இப்படியான சிறுபான்மை முதலாளித்துவ அரசுகளுக்கு முண்டுகொடுக்கின்ற நிலைக்கு கட்சியையும் கொள்கைகளையும் விற்றுள்ளார்கள்.



இந்திய அரசியல் சமஷ்டியைத் தழுவிய மாநில இணைப்பாட்சி முறைகளைக் கொண்டது. மத்திய அரசின் செல்வாக்கு மாநில அரசுகளிலும் இருந்தால்தான் மத்திய அரசுக்கான ஆதரவுகள் தேசம் தழுவியதாக இருக்கும். வி.பி. சிங்கின் தேசிய முன்னணிக் கட்சிகள் மாநிலங்களின் செல்வாக்கை இழந்துவிட்டன. தி.மு.க அரசு ஓர் ஆண்டு முன்பாக தேர்தலை நடைபெற்றதால் நிலைத்துள்ளது. ஏனைய மாநிலங்களில் இவ்வாறான பிரச்சனைகள் தோற்றம் பெறக்கூடும். மேலும் பாரதீய ஜனதா போன்ற இந்துமத தீவிரவாதக் கட்சிகளின் இராமஜென்ம பூமி விவகாரத்திற்கெதிராக முஸ்லீம்களின் எழுச்சிகள், இவைகளைவிட உள்நாட்டின் அமைதிக்கு அச்சுறுத்தலான அகாலிதளத்தின் பிரிவினைக் கொள்கைகள், அதற்கெதிரான தடைச்சட்டங்கள், கொலையிரட்டல்கள், பயங்கரவாத நடவடிக்கைகள் என்பன கொழுந்தறை உற்பத்திக் கொள்கைகளின் வளர்ச்சிகளைப் பெரிதும் பாதிக்கும். இவைகளைக் கட்டுப்படுத்த கடந்தகால அரசுகள் கையாண்ட அணுகுமுறைகள் பிழையானதென்றால் இன்று பதவியிலிருக்கும் வி.பி. சிங்கிற்கு சவால்விடுவதுபோல் "அகாலிதள மாணவர் இயக்க இந்திய சீக்கிய மாணவர் சம்மேளனப் பொதுச் செயலாளர் கர்மந்தர் சிங்கண்டு காலிஸ்தானுக்கு குறைந்த எதையும் ஏற்றுக்கொள்ளப் போவதில்லையென்றுள்ளார். பேச்சு வார்த்தைகளுக்கு முன் தடைச்சட்டங்கள் நீக்கப்பட வேண்டும், கைதிகள் (சீக்கியர்) விடுதலை செய்யப்பட வேண்டும், மத்திய பொலிஸ்படை வாபஸ் பெறப்பட வேண்டும் என்கிறார். இந்நிலையில் இப்பிரச்சனைகளை எப்படித் தீர்த்துவைக்கப் போகிறது தற்போதைய அரசு. மததீவிரவாதத்தையும், மதரீதியிலான பிரிவினைகளையும் வி.பி. சிங்கின் அரசு ஏற்றுக்கொள்ளப் போகிறதா?



வெளிநாட்டுக் கொள்கையில் காங்கிரஸின் கொள்கைகள் புறக்கணிக்கப்பட்டு, புதிய அணுகுமுறைகள் கையாளப்படுமா? இந்திய வர்த்தகப் பொருளாதார [illegible] மாற்றம் பெறுமா? தேர்தல்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

களில் வி.பி.சிங்கின் வெற்றிக்கும் காங்கிரஸின் தோல்விக்குமாகப் போட்டி யோட்டுக்கொண்டு தேர்தல் பிரச்சாரங்களுக்கும் செலவுகளுக்கும் முண்டியடித்துக்கொண்டு பண உதவிகளை வாரி இறைத்த ஐரோப்பிய வர்த்தக கூட்டு நிறுவனங்களுக்கும், அமெரிக்கா, ஜேர்மனி போன்ற நாடுகளின் வர்த்தக முதலைகளுக்கும் பூட்டிய கதவுகளைத் திறந்துவிடப் போகின்றாரா? அப்படியில்லாதவிடத்து எப்படி நன்றிக் கடன்கள் செலுத்தப் படப்போகின்றன என்பதைப் பொறுத்திருந்துதான் பாருங்களேன்.



வி.பி.சிங்கின் திறமையும் அனுபவமும் ஊழல் அற்ற உறுதியான அரசை அதன் ஆயுட்காலம் வரைக்கும் நிலைநாட்டுமா என்றால் அது கேள்விக்குறியாகவே இருக்கும். தனிக்கட்சியினது மந்திரிசபையில் ஊழல்கள் ஏற்பட்டதை அனுபவரீதியாக அறிந்து அம்பலப்படுத்திய அதே வி.பி.சிங் அந்த ஊழலுக்கு எதிரான விசாரணைகளை துரிதப்படுத்துவதின் மூலம் தன் தேர்தல் வாக்குறுதிகளைக் காப்பாற்றுவதோடு தன்மீதும் ஊழல் இருக்கவில்லை என்ற கறையையும் போக்கிடுவார். சிறுபான்மைக் கட்சிகளின் கொள்கை வேறுபாடுகள் தேசிய ரீதியிலான பொது நோக்குகளுக்கு முரண்பாடுகளை ஏற்படுத்தாது இருப்பின் அரசு நிலைத்து நிற்கமுடியும். மாறாக மாநிலக் கட்சிகளின் நலன்களிலும், தனிக்கட்சிகளின் உறுப்பினர்களைத் திருப்திப்படுத்தும் நோக்கிலும் மந்திரிசபை விஸ்தரிக்கப்படுமேயானால் மக்களால் நிராகரிக்கப்பட்ட கட்சிகளின் அங்கத்தவர்களுக்கும் மந்திரிப் பதவிகள் கிடைக்க வாய்ப்புண்டு. இவ்வாய்ப்புக்களை வழங்குவதன் மூலம் ஒழுங்கீனங்களுக்கும் ஊழல்களுக்கும் வாய்ப்புக்கள் வழங்கப்படும். மேலும் பிரதமர் வி.பி.சிங் தன்னிடம் வைத்துக்கொண்டுள்ள மந்திரிப் பதவிகளைப் பார்த்தால் இவைகளுக்கு ஏற்ற ஒருவரும் கட்சிக்குள் காணமுடியாத குறையும் தென்படுகிறது. இவ்வாறான குறைபாடுகள் நிறைந்துள்ளதாலும் மற்றக்கட்சிகளின் தயவிலேயே காலம் முழுவதும் இருக்கவேண்டியிருப்பதாலும் நிலையான நீடித்த அரசாட்சி நடைபெறும் வாய்ப்புக்கள் அருகியே உள்ளன.

தோட்டத் தொழிலாளர்கள் இந்த நாட்டின் அந்நிய செலாவணியைப் பெருக்கி வருபவர்கள். நாட்டில் பதற்ற நிலைமை ஏற்படுகின்றபோதெல்லாம் பொருளாதாரம் வீழ்ந்துவிடாமல் உழைப்பைப் பாதுகாத்து வருபவர்களும் தோட்டத் தொழிலாளர்கள்தான். இந்நாட்டில் சமர்ப்பிக்கப்பட்ட ஒவ்வொரு வரவு செலவுத் திட்டத்திலும் தோட்டத் தொழிலாளர்கள் ஒதுக்கப்பட்டே வந்துள்ளனர். இன்றைய அரசாங்கம் தோட்டத் தொழிலாளர்களையும், இந்திய வம்சாவளி மக்களினதும் வாக்குப்பலத்தால்தான் என்று பெருமைப்படுகின்றதும், அவர்களின் பாதுகாப்பு, முன்னேற்றம் போன்றவற்றில் கடந்த 12 ஆண்டுகளாக எவ்வித அக்கறையும் கொண்டதாக தெரியவில்லை என்று இவ்வ[illegible] தலைவர் திரு-டி. அ

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# உலகக் கண்ணோட்டம்



## பிலிப்பைன்ஸ் சதிப்புரட்சி முறியடிப்பு

ஆறு நாட்கள் இடம் பெற்ற புரட்சியை நசுக்குவதற்கு பிலிப்பைன்ஸ் ஆயுதப்படைகளுடன் அமெரிக்க எப்-4 சண்டை விமானங்களும் புரட்சியை நசுக்க உதவிபுரிந்ததின் மூலம் புரட்சி முறியடிக்கப்பட்டுள்ளது. கிளர்ச்சிக்காரர்களின் அரசியல் பொருளாதார சீர்திருத்தங்களை உதாசீனம் செய்தால் பிலிப்பைன்சில் மற்றோர் புரட்சி ஏற்படக்கூடும் என ஜனாதிபதி அக்கிணோவின் தேசியபாதுகாப்பு ஆலோசகர் எச்சரித்திருக்கிறார். சதிப்புரட்சியை நசுக்க அமெரிக்க உதவி கோரப்பட்டதில் ஜனாதிபதி அக்கிணோவின் அமெரிக்க தளங்களை வெளியேற்றுவதற்கான பேரம் பேசும் நிலைப்பலவீனமடைந்திருப்பதில் இதைப் பயன்படுத்தி அமெரிக்கா "கிளார்க்விமானத்தளம்" "சுபிக்கடற்படைத்தளம்" மற்றும் 4 தளங்கள் ஆகியவற்றை தொடர்ந்தும் வைத்திருப்பதின் மூலம் இந்த சமுத்திரப்பிராந்தியத்தின் தனது ஆதிக்கத்தையும் நாசகார நடவடிக்கைகளையும் மேலும் வலுப்படுத்தும் உபாயம் உருவாகலாம்.

---

## சீனாவில் மேற்கத்தைய சீரழிவுகள்

விபச்சாரம், சூதாட்டம், பாலியல்படங்கள், பெண்கள்வர்த்தகம் ஆகியன சீனாவில் அதிகரித்துவருகின்றது. இதற்குகாரணம் மேலைநாட்டுக் கொள்கைகளே என்ற "பீகிங் டெய்லி" பத்திரிகை கூறியுள்ளது. பெண்களைக்கடத்திய 14000 பேர்கைது செய்யப்பட்டுள்ளதாயும் இவர்களில் 3100 பேர்களுக்குத்தண்டனை வழங்கப்பட்டுள்ளதாயும் அச்செய்திதெரிவிக்கின்றது. மேற்கத்தைய நாடுகளின் ஏஜென்சிகளுக்கு பெண்களை விபச்சாரிகளாகவும், மனைவிகளாகவும், தொழிலாளர்களாகவும் இவர்கள் விற்பனை செய்துள்ளனர். இச்சட்டவிரோத வர்த்தகத்திலிருந்து சுமார் 20,000 த்துக்கும் அதிகமான பெண்களும், பிள்ளைகளும் பொலிசாரினால் மீட்கப்பட்டிருக்கிறார்கள். 6,50,000 பாலியல் [illegible] க்களுக்கும், சஞ்சிகைகளு

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இலைகள் விற்பனை செய்த 1251 இடங்களும், வீடியோ காட்டப்பட்ட 183 அறைகளும் மூடப்பட்டுள்ளன. மாவோவினுடைய கலாச்சாரப் புரட்சியினால் ஏற்பட்ட நன்மைகள் யாவும் இந்த மேற்கத்தைய கலாச்சார சீரழிவுகளினால் சின்னாபின்னப்படுத்த முயலும் நிலையையே இச் சம்பவங்கள் காட்டுகின்றன.

## தென்னாபிரிக்க வெள்ளை அரசாங்கத்தின் சீர்திருத்தவாத முயற்சிகள்



நெல்சன் மண்டேலா

தென்னாபிரிக்காவின் கறுப்பின மக்களின் விடுதலைக்காக கடந்த 26 வருடங்களுக்கு மேலாக சிறை வாசம் அனுபவித்து வரும் தோழர் நெல்சன் மண்டேலா அவர்களுடன் தென்னாபிரிக்க வெள்ளை அரசாங்கத்தின் ஜனாதிபதி சீர்திருத்த அடிப்படையிலான பேச்சுவார்த்தை ஒன்றை மேற்கொண்டுள்ளார். எனினும் "பிராந்தியக் குழுச்சட்டம்", "சனத்தொகை பதிவுச் சட்டம்", "காணிச்சட்டம்", "கறுப்பின மக்களின் அரசியல் உரிமைகள்" போன்ற மிகமுக்கிய பிரச்சனைகள் இருக்கும் நிலையில் இன ஒதுக்கல் கொள்கையை வெறுமனே சீர்திருத்தத்தின் மூலம் தீர்க்கலாமென முயற்சிக்கிறார். மாறாக இன ஒதுக்கல் கொள்கையை ஒழிப்பதற்கு முயற்சிக்கவில்லை என எல்மா மூஸா என்ற வழக்கறிஞர் தெரிவித்தார். அதேசமயம் தோழர் மண்டேலா மக்களின் நீண்டகாலக் கோரிக்கையிலிருந்து பின் வாங்கமாட்டார் என்பது நிச்சயம் என இன ஒதுக்கல் எதிர்ப்பாளர் மாரிய மொரோப் கருத்து தெரிவித்துள்ளார்.

## எல்சல்வடோரில் தொடரும் போராட்டங்கள்

அமெரிக்க ஆதரவு அரசாங்கத்தை எதிர்த்து போராடிவரும் இடதுசாரிப் போராளிகளின் போராட்டங்கள் உக்கிரம் அடைந்துவருகின்றன. போராளிகளின் முக்கிய தளங்களை மீண்டும் கைப்பற்றும் அரசாங்கத்தின் இம்முயற்சியை அடுத்து பல நூறு ஆயுதப்படைகள் மாண்டுள்ளதுடன் பல ஆயிரக்கணக்கான மக்கள் அகதிகளாகியுள்ளனர். பிரபல மனித உரிமைகள் இயக்க ஊழியர் உட்பட 6 மதகுருமார்கள் சித்திரவதை [illegible] படுகொலை [illegible]

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# ஐக்கியப்படுவோம்
# போராடுவோம்
# அமைதி காண்போம்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்